REGD 4642 M

சந்தா விபரம்
—
1 ஆண்டுக்கு 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 28—5—50 | இதழ் 48

சென்னை ஸ்டேடியம் மைதானத்தில் 14—5—50 ஞாயிறு அன்று நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் டைகர் நாட்டெடர்ரியுடன் போட்டியிட்டு வெற்றி பெற்ற 'திராவிட வீரர்' எம். கித்தேரி மூத்து.

★ அடிவானம் நோக்கி! ★

வயதேறிய போர் வீரன் — ஆம், அவன் உலக அமைதிக்காகவும், தான் பிறந்த பொன்பூமி, வீரத்தின் விளைநிலம் வியட்நாமின் விடுதலைக்காகவும் தன் உயிரைப் பணயம்வைத்துப் போராட உறுதிபூண்டு விட்டான். உலக உயிரினத்திற்காக அவன் எலும்பொடியப் பாடுபட்டிருக்கிறான். இரத்தம் சொட்ட போரிட்டிருக்கிறான். நாட்டு மக்களுக்காக, தன் வீட்டை, மனைவியை, மற்றுள்ளோரை மறந்தேவிட்டான்.

அறுபது ஆண்டுகள் — அப்பாடா, அனுபவச் சித்திரம் அப்போர் மறவன்! புயல் உண்டு, அவன் வாழ்வில். கொட்டும் பனி மூடிப் பருவங்கள் இருக்கத்தான் செய்தன. நெருப்பு உண்டு! கைவிலங்குகள், சிறையறைகள் பெரும்பகுதியைத் தங்களிடம் வைத்துக்கொண்டன, அவனது போராட்ட வாழ்வில்!

சாவைத் துச்சமெனத் தள்ளிவிட்டு நடந்தான். நூற்றுக்கணக்கான வெற்றிகளைக் குவிக்க எண்ணிறந்த போர்க்களங்களில் நின்றிருக்கிறான். சிறு சிறு தோல்விகள், அடுக்கடுக்காகப் படையெடுத்து வந்த துன்பங்கள், துயரங்கள் அவனது உறுதியைக் குலைத்ததில்லை.

—அவனது தோள்கள் துவண்டு விடும். கால்கள் தள்ளாடும். தொண்டை வரண்டுவிடும். ஆனால், அவனது இரும்பு இதயத்திலே போர்த் தீ மட்டும் கொழுந்து விட்டெரியும். 'ஏறுநீ, ஏறு நீ, முன்னேறு நீ' என்று வாய் கூவும்!

அவன் முன்னேறிக்கொண்டேயிருக்கிறான். வாலிபர் பட்டாளம், இதயத்திலே எழுச்சி வெள்ளம் பொங்கி வழிய வழிய அவன் காலடி சென்ற பக்கம் கலக்கமின்றி, தயக்கமின்றி, நடந்து சென்றுகொண்டே இருக்கின்றது தங்கள் தேசியத் தந்தையைப் பின்பற்றி!

அந்தக் கிழ தளபதி துப்பாக்கியைத் தூக்கி நிறுத்துங்கள், வாளை உருவி எதிரியின் வழி பார்த்து நில்லுங்கள்... என்று ஆணை பிறப்பிக்கிறான். அதோ, துடி துடிக்கிறார்கள் இளைஞர்கள், கண்களிலே கனல் வீச, உருவிய வாள்களில் ஒளி சிந்த,—எதிரிகளை வெட்டிக் குவிக்க!

அந்த முதிர்ந்த தோழன், இனத்திற்காகப் போராடும் வீரன், உரிமை வேட்கையின் வடிவம், துன்பத்தால் தாக்கப்பட்டோர் அத்தனைப் பேருக்கும் நண்பன்.

அந்த விடுதலை வீரனைப் பின்பற்றி நடக்கக் கூடியுள்ளோம். வாளேந்தி, துப்பாக்கி தாங்கி, இதயத்திலே எழுச்சியை எழுப்பி நடக்கிறோம்...............

பாட்டொலி கேட்கிறது நம் செவிகளில்! பாராட்டுரை அலை அலையாக நம் சிந்தனைக் கரையில் மோதிக் கொண்டிருக்கிறது.

அவர் அடையத் துடிக்கும் அடிவானம் அதோ தெரிகிறது. உலக சமாதானம் எனும் வானமும், தான் பிறந்த நாட்டின் உரிமை வாழ்வு எனும் பூமியும் முத்தமிடும் இடம்! அதை நோக்கி நடந்துகொண்டே இருக்கிறார் டாக்டர், ஹோசிமின். ஆம், அவர் அந்த இலட்சிய அடிவானத்தை நோக்கி யாத்திரை கிளம்பிவிட்டார். அவரது இலட்சியபுரிப் பயணத்திலே ஆண்டுகள் ஐம்பத்தொன்பதும் கழிந்துவிட்டன. அறுபதாம் ஆண்டும் பிறந்துவிட்டது.

குதூகலிக்கின்றனர், கூடப்பிறந்தவர்கள். சந்தோஷத்திலே மூழ்கித் திளைத்துக் கூத்தாடுகின்றனர், சொந்தநாட்டு மக்கள், வியட்நாமில் வாழும் இரண்டு கோடி மக்களும் இத்திங்கள் 19-ம் நாளைத் திருவிழாவாகக் கொண்டாடினார்கள். தங்கள் தலைவரின் அறுபதாம் ஆண்டுபிறப்பு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

x x x

டாக்டர் ஹோசிமின்—இப்பெயர் இன்றைய தென்கிழக்கு ஆசியப் பகுதியிலே மிகப்பழகிப்போனபெயர் அவர் ஒருநாட்டு மக்களின் உரிமை எண்ணச்சுண்ணத்தால் செய்யப்பட்ட வண்ணச்சிலை.

ஹோ, இளமையிலே படிப்பிலே நாட்டம் செலுத்தினார். இந்தோசீனா அரசியல் புயலில் அவரது வீட்டாரும் மாட்டித் தவித்தபொழுது தான் அவர் மனதிலே ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினார்கள், அவரது தந்தையும் தனயனும் என்று சந்தேகப்பட்டு, சிறைப் பறவைகளாகப் பிடித்தபொழுது தான் ஹோ, 'ஓகோ, இந்த ஆதிபத்ய வெறி ஆபத்தானது, அடக்கப்படவேண்டும், இந்த ஆணவ வெறியாட்டம்........" என்று எண்ணினார்.

நாடோடியாக, இங்கிலாந்திலே, அமெரிக்காவிலே, ரஷ்யாவிலேவாழ்ந்தார். ரஷ்யப்பொதுவுடைமைமணத்திலே கொஞ்சம் அவருக்கு அதிக நாட்டமிருந்தது.

கி. பி. 1919ல் பிரான்சில் நடந்த சமாதான மாநாட்டிலே, பங்கு கொண்டார். அவர் வாழ்விலே, அது ஒரு குறிப்பிடத்தக்க திருப்பமாகி விட்டது. அவர் தன்நாட்டுமக்களின் விடுதலைப்போரில் தன் உயிரை, உடலை, உடைமையை இழக்கத்தயாரானார். ஏடெழுதினார், கூடாது என்று தடுத்துவிட்டது, பிரஞ்சு சர்க்கார். அவர் பேனாவைப் பிடுங்கி விடப் பெரும்பாடு பட்டது, அந்தப் பிடிவாதமிக்க பிரஞ்சு ஆட்சியாளர்!

ஹோவைப் பிடிப்பவர்களுக்குப் பரிசில் உண்டு என்று அறிவித்தவுடன், பிரான்சைவிட்டு, சைனாவிற்குச் சென்றுவிட்டார். இப்பொழுது ஓடியொளிய இடந்தேடும் சியாங்கைஷேக்கிடம் அறங்கூறுவோராக அமர்ந்தார்,

சீனாவிலிருந்தாலும், தனது தாயகமாம் இந்தோ சீனாவின் நல்வாழ்விற்கான திட்டங்களைத் தீட்டியபடியே இருந்தார்.

இரண்டாம் உலகப்போர்தொடங்கியது. ஹோ, புதியதோர் புனைபெயரில், புகுந்துவிட்டார்; தான் பிறந்த மண்ணின் விடுதலைப் போராட்டத்தில்! ஜப்பானை எதிர்த்துப் போராடும் கொரில்லா வீரர்களுக்குத் தலைமைபூண்டு, திடீர்த்தாக்குதல்களை நடத்திவந்தார். அமெரிக்காவிற்கு, பெருந்துணையானார்.

வியட்நாமின் சுதந்திரக்குடியரசை அவர் நிலைநாட்ட படை படையாக, குவிந்து வந்தஎல்லா இடையூறுகளையும், இன்னல்களையும் எதிர்த்துப் போராடியிருக்கிறார். எனினும், இந்தோ சீனா எனும் நாடே, எழிலுள்ள நாடே, என்னைவிட்டு நீயே, தனியாகப்போக எப்படிச் சகிப்பேனோ என்று வருத்த விருத்தம் பாடி, பிரஞ்சு ஆளவந்தார்கள் புது முறையைக் கையாள்கின்றனர்.

பழைய அரச குடும்பத்தைச் சேர்ந்த பாவாடோய் கையிலே ஆட்சியை ஒப்படைத்துவிட்டதாக்விளம்பரம் செய்துவிட்டு, வேடிக்கை பார்க்கிறார்கள். ஒரு நாட்டிற்கு — இரண்டு சர்க்கார்கள்! மற்ற உலக நாடுகள் இவைகளில் எதை ஒப்புக்கொள்ளுகின்றன என்றுகூர்ந்து கவனிக்கிறது, தன'குறும்பு' வெற்றி பெறவேண்டுமே என்று ஏங்கிக்கிடக்கும், பிரஞ்சு சர்க்கார். ஆனால், தூங்கிய உரிமை உணர்ச்சியைத் தட்டி எழுப்பிவிட்டு, பட்டாளங் கூட்டி நிற்கும் சிங்கம் — டாக்டர் ஹோ! இவர்களின் சூதும், சூழ்ச்சியும், அவரின் எஃகு இதயத்தை என்ன செய்யமுடியும்? அமெரிக்காவும், இங்கிலாந்தும், பிரஞ்சுத் துரைத்தனத்திற்குப் பின்பாட்டுப் பாடுகின்றன. இந்தப் பின்னணி சங்கீதத்தைக் கேட்டுச்சகிக்க மக்கள் தயாராக இல்லை. சிகப்பேறிய சீனாவும், ரஷ்யாவும், ஹங்கேரி, ருமேனியா, போலந்து ஆகிய நாடுகளும். டாக்டரின் ஹோவின் ஆட்சியை அங்கீகரித்துவிட்டனர்.

X X X

அந்த இலட்சிய வீரருக்கு அறுபதாம் ஆண்டு பிறந்துவிட்டது. அவர் பிறந்தநாள் விழாவிலே நம் இதயபூர்வமான வாழ்த்துக்களையும், உரிமையாக்குகிறோம்.

அவர் ஐந்தடி உயரம் — ஒல்லியான சரீரம் — படாடோபம் எதுவும் அஞ்சும்சாதாரணகாக்கியுடை — சிவப்படாத சிகை, கோதிவிடப்படாத தாடி.........இப்படித்தான் அவரை வர்ணிக்கமுடியும். அவர் எளியவாழ்வு வாழ்கிறார். எனினும் இந்த உலகத்தின் கண்களிலே ஒரு "இமயமாகத்" தெரிகிறார்.

அவரை எதிர்த்திடும் மாற்றுக் கட்சியினரும் அவரைப்புகழ்வர் — அவரின் பெருங்குணத்திற்காக, எளிய வாழ்விற்காக, அவரது உள்ள உறுதிக்காக, மக்களின் இதயத்திலே தவிழ்ந்தாடும் சாதாரண 'ஆசாபாசங்களை' அறிந்திருக்கும் நுண்ணறிவுத் திறத்திற்காக, அவரதுஉண்மையான நாட்டுப்பற்றிற்காக; உரிமைப் போராட்டத்திலே அவருக்குள்ள திடநம்பிக்கைக்காக! ஆம், அவர் உருவில் சிறியவர்—ஆனால் செயலில் பெரியவர்! புத்தகத்தை, அதற்கு மாட்டப்பட்டிருக்கும் அட்டையைக் கொண்டே மதிப்பிட்டுவிடாதே என்பார்களே, அப்படித்தான், டாக்டர் ஹோவின் உருவை, எளிய தோற்றத்தை முதலாகவைத்து அளந்துவிடக்கூடாது, ஆடைவகைகளிலோ அலங்காரத்திலே, படாடோபத்திலே, அவர் வெறுப்புக்கொண்டவர் ......ஆடைபோடலில் போட்டி இல்லை எனக்கும் மற்றநாட்டுத் தலைவர்களுக்கும்!

என்னுடன் பிறந்தவர்கள் எத்தனையோ பேருக்கு உடுத்த உடையில்லையே என்று 'ஒப்பாரி'யிடும் பாழ்நிலை மாறாதவரை, அலங்காரமாக அணிகிறவர்களையே சமூகத்தின் அவமானச் சின்னங்கள்என்றுதான் கருதுவேன்...என்று கூறுவாராம்.

டாக்டர், ஹோ, இந்த அவனிக்கு ஒரு அதிசயப் பிறவி! அவரது ஆற்றலுக்கு அலங்காரப் பட்டுத் திரையில்லை! அவரது பொன் குணங்கள், பூட்டில்லாத இரும்புப் பெட்டியிலே உள்ள வைரங்களைப்போல! அவர் ஒரு குடியரசின் தலைவர், ஒரு சமுதாய இருட்டினை விரட்டிவிட்ட ஒரு ஒளிவிளக்கு, அவர் நினைத்தால் எதையும் செய்யலாம், எந்த நிலையையும் உண்டாக்கலாம். ஆனாலும் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. படாடோபம் பண்ணவில்லை.

அவரிடம் உலகு கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பெரும் பண்பு— ஆடம்பரமின்மை, அடக்கமுடைமை, அதே நேரத்தில் ஆற்றலுடைமை! அதனால்தான் படிக்காத ஒரு மக்கள் கூட்டத்தைபடையாகத்திரட்டி, ஒரு பெரிய வல்லரசோடு போரிட முடிந்தது. அந்தப் பாமரருக்குப் புரியும் கொச்சை மொழியிலே பேசி அவரது குருதி கொதிப்படையச் செய்து, உணர்ச்சியிலே கொந்தளிப்பை விதைத்து, கொண்டுவந்து நிறுத்தினார் போர்க்களத்தில்! — ஆம், விடுதலைப் பட்டாளத்திற்குக் கொட்டு முரசமானார், ஊதும் வெற்றிச் சங்குமானார்!

பிரஞ்சுத் துரைத்தனத்தார் ஒரு பயங்கரத் திட்டமிட்டே வேலை செய்தனர். நாகரிக உலகு நடுங்கும் அவர்கள் அடிமைத்தனத்தை வளர்க்க ஊற்றிய நீரும், இட்ட எருவும் எவ்வளவு துணிகரமான ஏற்பாடுகள் என்று புரிந்து கொண்டால்! ஆம், அடிமைத்தனத்தை வளர்க்க அறியாமையைப் பெருக்கத் திட்டமிட்டனர்.

என்ன நெஞ்சழுத்தம் ... எவ்வளவு நேர்மைப் பஞ்சம்...எவ்வளவு வஞ்சக விக்கம்! பிரஞ்சு ஆட்சியா

ளர்கள், படிக்கும் இளம் பிள்ளைகள் அபினையும், கஞ்சாவையும், இவை போன்ற மயக்கந் தந்து மந்த புத்தியை ஏற்படுத்தும் நச்சுப் பொருள்களை விற்கப் பள்ளிகளிடையே ஏற்பாடு செய்துவிட்டனர்.

ஹோ பார்த்தார்...சிந்தித்தார்... சிரித்தார், கோபத்தோடு, அதே நேரத்தில், சிந்தனைத் தெளிவோடு!

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், இது நமக்கே உரிமையாம் என்பதுணர்ந்தோம்...என்று பாடினார். கூடிவிட்டனர், 'அரும்பு மீசையினர்' அவரைச்சுற்றி! 'ஆணையிடுங்கள், தலைவரே, தூள் தூளாக அடிக்கிறோம், இந்தச் சூதுமதியினரை, துரோக நெஞ்சினரை' என்று முழக்கமிட்டனர்.

சிங்க இளைஞரே, திருப்புங்கள் உங்கள் முகங்களை, திறவுங்கள் விழிகளை, சுடர் முகந் தூக்கி, அரும்பு மீசை தடவி, தோள்களை உயர்த்தி பாருங்கள் உங்கள் நாட்டைஎன்றார். கூட்டை உடைத்துக்கொண்டு ஓடிவரும் சிறுத்தைகள் கூட்டம்போல வந்துவிட்டனர் இளைஞர்கள்! இங்கு உங்கள் நாட்டிற்கு இழிகழுதை ஆட்சியா என்றார். கூடாது, ஆகாது, ஒழித்தே தீருவோம் அந்நிய ஏகாதிபத்தியத்தை, அழித்தே தீருவோம், ஆணவக்காரக் கும்பலை' என இடிமுழக்கம் செய்தனர். எலிகளென உங்களை இகழ்கிறது பிரஞ்சு சர்க்கார் என்றார். நாங்கள் புலிகள் என்பதை நிரூபிப்போம் என்றனர். இரவைப் பகலென எண்ணி ஏமாந்தீர் இன்றுவரை, இனியேனும் வந்தவரை விட்டு உன் சொந்த நாட்டை பூந்தோட்டமாக்கப்புறப்படுவீர்களா ...என்றார். தயார், தயார் ... என்றனர்.

டாக்டர் ஹோ, ஒரு வாலிபர் சேனையையே தன் நாவசைந்தால் நாநிலம் நடுங்கும்வகையில் போரிடத் தயாராக இருக்கும் நிலைமையை ஏற்படுத்திவிட்டார்.

ஆம், அதோ டாக்டர் ஹோசிமின் போகிறார், வானவில்பாதையில்! அங்கு பல நிறங்கள் உண்டு. ஏழை, எளியவர், பணம் படைத்தோர், பட்டம் ஓட்டிகள், பதவி தேடிகள், எல்லோரும் அவரது உரிமைப் பாதைக்கு தடைகற்களாக இல்லை. அவரை ஊக்குவிக்கிறார்கள். அவர் பின்னால் தாம் பிறந்த நன்னாட்டின் உரிமைக்காக குருதி கொட்டினாலும் உறுதி குன்றாத இளைஞரின் பட்டாளம் அவர் அடிச்சுவட்டில் நடந்து செல்கிறது.

அவரது இலட்சிய அடிவானம்— தன் தாயகத்தில அந்நியர் ஆதிபத்யம் கூடாது என்பது தான். அந்தப் பாதையிலே நடந்து சென்று வெற்றியுங் கண்டு விட்டார். அறுபதாண்டுகள் கடந்து விட்டன. இன்னும் உரிமைப்பாதையிலே இலட்சிய அடிவானத்தை நோக்கி நடக்கிறார். இலட்சிய அடிவானம் எட்டித் தொட முடியாததல்ல, அது எழில் நிறைந்தது, முயன்றால் அடையக் கூடிய 'பொன்னகரம்' ஆகவே, டாக்டர் ஹோசிமின் நடக்கிறார், நடக்கிறார், நடந்து கொண்டே இருக்கிறார்.

அவரது அடிவான யாத்திரை வெற்றி முத்திரை பெற்றுவிட்டது வெற்றி கிடைத்துவிட்டது—முழு உருவில் அல்ல! ஆகவே தொடர்கிறது யாத்திரை, மேலும் நடக்கிறது பிரயாணம், முடிவிடத்தினை எட்டிப் பிடிக்கும் இடத்திற்கு வந்துவிட்ட பிரயாணி களைத்து விழுவதைப் போல, விடுதலைப் பாதையில் கடைசி இலட்சியத்தை அடைவதற்குள், மிக அருகில் நெருங்க நெருங்க, உறுதி நொறுங்கி ஒடிந்து விழுவார்கள் மக்கள்......ஆனால் வியட்நாம் வீரர்கள் அந்த விதியையும் பொய்ப்பித்து விட்டார்கள்.

அறுபதாண்டுகள் கடந்த தொண்டு கிழவரை அந்நாட்டு மக்கள் வாழ்க என்று வாழ்த்துகின்றனர். அவனி அவரை பாராட்டுகிறது. நாமும் வாழ்த்துகிறோம், வாயார, நாவார, மனமார!

*

அவரது முயற்சி!

ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் டிரிக்வீ-லீ, மாஸ்கோ சென்று ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்துவிட்டுத் திரும்பியுள்ளார். தனது விஜயத்தின் நோக்கம், மேற்கு வல்லரசுகளுக்கும், ரஷ்யாவுக்கு மிடையே யுள்ள 'தகராறு நிலையைத் தவிர்ப்பதுதான் என்பதாக வெளியிட்டுள்ளார். ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்தபின் பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கத் தலைவர்களைச் சந்தித்து இதுபற்றிப் பேசப் போவதாக அறிவித்துள்ளார். உலகம் பெரும்போர் என்ற மரணக் குழிக்கு வெகுவேகமாக விரைந்துகொண்டிருக்கிறது. அதைத் தடுக்க ஆசையுடன் முயற்சிக்கிறார் — டிரிக்வீலீ. முயற்சி— வெற்றி தருமா? கிடைக்கக்கூடிய பதில், சோகமாகத்தானிருக்கும்!

*

சீனாவும் இந்தியாவும்!

*

சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் மாஸே—துங்-கைச் சந்தித்து தனது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கிறார், இந்தியாவின் சார்பில் அரசியல் தூதராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் சர்தார் கே. எம். பணிக்கர்.

அதுபோது, மாஸே—துங் இந்தியாவுக்கும் சீனாவுக்கு மிடையேயுள்ள உறவுநிலை குறித்து வெளியிட்டுள்ள வார்த்தைகள், எவ்வளவு தூரம் இநதியாவின் எதிர்காலத்தில் சீனா சிரத்தை கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும்.

ஆனால், மேற்கத்திய வல்லரசுகளோ, சீனாவைக் காட்டி இந்தியாவைப் பயமுறுத்துகின்றனர். கடுங்காற்றும், நாசப் புயலும் அருகி வந்து கொண்டிருக்கிறது போல, சீனாவைக் காட்டி எச்சரிக்கின்றனர். கம்யூனிசம் வளர்கிறது — ஜாக்கிறதை! என்று பூச்சாண்டி காட்டுகின்றனர்.

சீனக்குடியரசுத் தலைவர், சிந்தியிருக்கும் வார்த்தைகள் சிந்தனையைக் கிளரக்கூடியவைமட்டுமல்ல — ஆசியாவின் இரண்டு கண்களில் ஒன்றான சீனாவுக்கும், இந்தியாவுக்குமிடையே இருக்கவேண்டிய நட்பின் அவசியத்தையும் வலியுறுத்துவதாகும்.

*

பிருந்தாவனம்

முன்ஷி திட்டம்

பரதன்

"பார்த்தீரா, ஐயா! நம்ம முன்ஷியின் சுறுசுறுப்பை! ஆசாமி, பலே பேர்வழி. எதிலும் இப்படித்தான்—எப்போதும் இதுபோலத்தான்."

"முன்ஷியின் சிலாக்கியமான குணமும் திறமையும் தெரியாமலா நம்ம நேரு, அவரை இபபோது மத்திய சர்க்கார் மந்திரியாக்கினார்! நேருக்குத் தெரியும் சார்! திறமைசாலிகள், குணவான்கள் யாரார் இருக்கிறார்கள், எங்கெங்கு இருக்கிறார்கள் என்பது தெரியும். அவர் என்ன சாமான்யமானவரா?"

"அதேதான் சார், நானும் சொல்கிறேன். நேரு, ஏன் இப்போது, முன்ஷியைத் தேடிப்பிடித்து மந்திரியாக்குகிறார் — என்ன காரணம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்........."

"அதுதான் தவறு! ஏன், வீணாக யோசிக்கவேணும்! நேரு, ஒரு காரியம் செய்தால் அதிலே, காரணம் இருந்தே தீரும். என்ன காரணம் என்று ஏன் நாம் சிந்திக்கவேண்டும்',

"சிந்தித்துப் பார்ப்பதாலே என்ன தவறு? சிந்தித்துப் பார்த்ததாலேதான், நேரு, முன்ஷியை மந்திரியாக்கினது தகுந்த காரணத்தோடுதான் என்கிற உண்மை விளங்கிற்று. பாரும், முன்ஷி, மந்திரியான உடனே, மளமளன்னு வேலையிலே ஈடுபட்டு, விட்டார். டெல்லி செகரடேரியட்டை ஒரு ஆட்டு ஆட்டி விட்டாராம் சார்! கொண்டுவாங்க எல்லா "பைல்களையும்" என்று ஒரு உத்தரவு போட்டாராம், அவனவனும், பைல்களைத் தூக்கிண்டு போய் அவர் எதிரே நின்று கொண்டிருக்கான்கள்—கிடுகிடு கிடுன்னு 'பைல்களை' எல்லாம் படித்துப் பார்த்துவிட்டு, விஷயத்தை விளக்கமாகத் தெரிந்துகொண்டு, என்ன செய்வது என்கிற திட்டமும் போட்டுவிட்டார்."

"புத்திமான்! அவருக்கென்ன, இந்த "பைல்கள்" ஒரு பிரமாதமா? வேதம், உபநிஷத், கீதை இவைகளையே கரைத்துக் குடித்தவர்!"

"ஆமாம்—'பைல்களை'ப் படித்து முடித்ததும், விஷயத்தை விளக்கிப் பத்திரிகையிலே அறிக்கையும் விட்டிருக்கார்!"

"பாருமே! பொதுமக்களுடைய ஆட்சின்னா இப்படித்தானே இருக்க வேண்டும்! மந்திரியான உடனே, மக்களிடம், நிலைமையை விளக்கிக் காட்டுகிறார்."

"அதுமட்டு மில்லையே! வேலையிலே போய் உட்கார்ந்த உடனே, அங்கே என்ன குறைபாடு இருக்கிறது என்று கண்டுபிடித்து விட்டார்!!"

"ஆமாம்! உணவு இலாக்கா ஆமை வேகத்திலே நகர்ந்திண்டு இருக்காம்."

"சூட்சமத்தைப் புரிந்துகொண்டு விட்டார், பாருங்க, சார்! புத்தி தீட்சணியமில்லாவிட்டா, கண்டுபிடிக்க முடியாதல்லவா?"

"சந்தேகமென்ன! புத்தி தீட்சணியம் இருந்ததாலேதான், அந்த இலாகாவிலே வேலைகள் ஏன் ஆமை வேகமாக இருக்கு என்கிற சூட்சமத்தைத் கண்டுபிடித்தார். அதுகூட விசேஷமில்லை. அந்த இலாகாவிலே என்ன குறை, குறைபாட்டுக்கு என்ன காரணம், அதைக் கண்டறிய வேண்டும் என்று அக்கறை பிறந்தது பாருங்கோ!! விசேஷம் அதிலே தானே இருக்கு!"

"ஆமாம் — மத்தவா மந்திரி வேலைக்கு போனாளானா, மாதச் சம்பளம் எவ்வளவு, அலவன்சு என்ன கிடைக்கும்; எங்கெங்கே டிபார்ட்டிக்குக் கூடபிடுவா, மச்சினனுக்கு என்ன உத்யோகம் தரலாம், பென்ஷன் வாங்கிண்டிருக்கிற மாமனாருக்கு என்ன வேலை புதுசா தேடிக்கொடுக்கலாம் என்ற இவைகளைத்தானே கவனிச்சிருப்பா? அக்கறை இவைகளிலேதானே ஏற்பட்டிருக்கும்!"

"சாமான்யாளுக்கு அப்படித்தான் எண்ணம் பிறக்கும். சகலகலா பண்டிதர், நம்ம முன்ஷி, அவர் கேவலம் பணத்துக்காகவா, வேலையை ஒப்புக் கொண்டார்!"

"பணம், அவர் பாதத்திலே கொண்டுவந்து கொட்டுவா சார்! பம்பாயிலே உள்ள சேட்டுகளைக் கேட்டால் போதுமே, லட்சலட்சமாகக் கொட்டுவா!"

"ஆமா, அவருடைய நோக்கம் சிலாக்கியமானது. ஆகவேதான் வேலையை ஏற்றுக்கொண்டதும், அந்த இலாகா விஷயமாக அக்கறையோடு விசாரணை நடத்தி, சூட்சமங்களைக் கண்டு பிடித்திருக்கார்!"

X X X

என் நண்பர்கள், மேலும் பேசத் தயாராக இருந்தார்கள். நான்தான் குறுக்கிட்டேன்; அவர்களின் புகழ் மாரி கொஞ்சம் ஓய்ந்தது.

X X X

"மத்திய சர்க்காரிலே, உணவு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும், முன்ஷியின் விஷயமாகத்தானா, இவ்வளவு விரிவாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" — என்று கேட்டேன். இருவரில் ஒருவர் பதில் சொன்னார்; புன்னகை தவழும் முகத்தவர்! "ஆமாம்! பதவிக்கு வந்த உடனே, ..."என்று ஆரம்பித்தார். நான் அவரை மீண்டும் தடுத்தேன், அவர் கூற எண்ணியதைச் சுருக்கமாகக் கூறுவதன்மூலம்.

"உணவு இலாக்காவிலே, பைல்கள் குவிந்துகிடக்கின்றன.

ஒரு 'பைலிலாவது' லட்சிய அளவு எய்தப்படவில்லை.

பல வாரங்களாகியும், உறுப்பு ராஜ்யங்கள் கொடுத்த தந்திகளுக்கு மத்ய சர்க்காரிலிருந்து பதில் அனுப்பப்படவில்லை.

இந்த இலாக்கா பல பேருக்கு அபக்யாதியை வாங்

கித் தந்திருக்கிறது.
என்று கூறி இருக்கிறாரே முன்ஷி, ..." என்றேன்.

ஆர்வத்துடன் ஆரம்பித்தார் நண்பர், "அதைத்தான் பாராட்டுகிறோம் என்ன அக்ரமம் பாருங்கள் சார்! சென்னையிலிருந்தோ குட்கிலிருந்தோ, டில்லிக்குத் தந்தி கொடுத்தால், டில்லியில் அதை வாங்கி வைத்துக்கொண்டு வாரக் கணக்கிலே, பதில்கூட எழுதாமலிருந்திருக்கிறார்கள்! உணவு சம்பந்தமான விஷயத்திலேயா, இப்படி இருப்பது" என்றார் — கோபத்தைத் துணைக்கு அழைத்தவண்ணம். மற்றொரு நண்பர், "இந்தச் சூட்சமத்தைக் கண்டுபிடித்துத்தான் நம்ம முன்ஷி கூறிவிட்டார்" என்றார். ஆர்வத்துடன். "மக்களாட்சி என்றால் இந்த இலட்சணம் இருக்கவேண்டும் பாருங்கள்!" என்று அரசியல் தத்துவம் பேசினார் முதல் நண்பர். "ஆமாம் ஆமாம்" என்று இருவருக்கும் சேர்த்துப் பதில் கூறினேன், நான். நான் அளித்த பதிலால், புது உற்சாகம் பெற்ற நண்பர் மீண்டும் ஆரம்பித்தார், "சென்னை மாகாணத்திலே, இருக்கும் 'ஸ்டாக்' தீர்ந்துவிட்டது—இன்னம் ஒரு வார காலத்துக்குத்தான் வரும்—உடனே அரிசியோ கோதுமையோ, சோளமோ, ஏதாகிலும் ஒரு உணவுப் பொருள் அனுப்ப வேண்டும் என்று தந்தி கொடுத்திருப்பா—உணவு இலாகாவிலே போய் அந்தத் தந்தி நிம்மதியாகத் தூங்கிண்டிருக்கு, நாள் கணக்காக் கூட அல்ல, வாரக் கணக்காக...... இங்கே, சென்னை சர்க்கார், டில்லியிலிருந்து பதில் வரும் என்று காத்துக்கொண்டே கிடக்கவேண்டியதுதான்! டில்லியோ தூங்கிண்டிருக்கு—தந்திகளை மெத்தையாகப் போட்டுக்கொண்டு!!"—என்று அலங்காரமாகப்பேசினார். மற்ற நண்பரோ, காரசாரமாகப் பேசலானார்," இப்படியும் இருக்கலாமா? பொறுப்புள்ள சர்க்கார் இவ்விதம் நடக்கலாமா? உணவுப்பஞ்சம் ஊரைமிரட்டிக்கொண்டிருக்கிற சமயத்திலேஇப்படி இருந்தா அதனாலே ஏற்படக்கூடிய ஆபத்துகளுக்கு யார் பொறுப்பாளியாவது? மக்களுடையகுரலை மதிக்காத மமதைதானே இந்த மந்தத்துக்குக் காரணம்!" என்று பேசினார்.

"ஆமாம்—கண்டிக்க வேண்டியதுதான் — முன்ஷியே 'கண்டித்துத்தான் இருக்கிறார். அவர் சொன்னதாலேதானே நமக்குத் தெரிந்தது, டில்லியிலே 'சோம்பேறி மடம்' போல உணவு இலாக்கா நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்கிற சூட்சமம்" என்றார் ஒரு நண்பர். மற்றவர் அதை ஆமோதித்து, "இந்தச் சூட்சமத்தை, அக்கரையோடு கண்டறிந்து, திறமையாகப்பரிசிலனை செய்து வெளிப்படுத்தினாரேமுன்ஷி என்பதற்காகத்தான் அவரைப் பாராட்டிப் பேசினோம்" என்றார். பொதுமக்கள் விஷயத்திலே,முன்ஷி போன்ற காங்கிரஸ் தலைவர்களுக்கு உள்ள அக்கரை, பிரச்னையைப் புரிந்துகொள்வதிலே உள்ள திறமை இவைகள் நிரம்ப இருக்கிறது என்பதையும் இந்தச் சம்பவத்தைக் கொண்டு விளக்கினீர்கள்" என்று நான் சொன்னேன். "ஆமாம், அதோடு, இப்படிப்பட்ட திறமைசாலிகளைத் தேடி எடுத்து பதவியில் அமர்த்துகிற திறமை நம்ம நேருவுக்குப் பரிபூரணமாக அமைந்திருக்கு பாருங்கோ! அதையும் பாராட்டினோம். என்றார் மற்ற நண்பர்.

நான் சிரித்துவிட்டேன் — என்னால் அடக்க முடியவில்லை, முயன்றும்!

இரு நண்பர்களுக்கும் கோபம்! அதை மறைக்க முயன்றனர், அதன் பலனாக முகத்திலே அசடு வழிந்தது.

"ஏன் சிரிக்கிறீர்கள்!" என்று கேட்டனர் இருவரும், ஒரே சமயத்தில், ஆனால வேறு வேறு குரலில்!

"காங்கிரஸ் மந்திரி முன்ஷியின் திறமையை இனிமேல் அவர் செய்யப்போகும் காரியத்தைப் பார்த்துத் தான் தீர்மானிக்கவேண்டும். நீங்கள் தொட்டிலுக்கு "ஆர்டர்" கொடுத்துவிட்டு, ஆலமரம் சுற்றுகிறீர்களே! வந்து என்ன சாதித்துவிட்டார் முன்ஷி இவ்வளவு புகழ்மாரி பொழிகிறீர்களே!!" என்று நான் கேட்டேன்.

"குறும்புக் குணம்தானே உனக்கு எப்போதும்! முன்ஷியின் அக்கரையும் திறமையும் அவருடைய அறிக்கை மூலம் விளக்கமாகத் தெரியவில்லையா! பாராட்டப்படாதோ அதற்காக"—என்றார் ஒரு நண்பர்.

"பொதுமக்களின் நன்மையைக் கருத்திலே கொண்ட சர்க்காரிலேதான் முன்ஷியைப் போன்றவர்களைக் காணமுடியும்" என்றார் மற்றவர். "நண்பர்களே! எந்த கருத்துரையைக் கூறினார் என்பதற்காக முன்ஷியை இவ்வளவு தூரம் நீங்கள் பாராட்டுகிறீர்களோ, அதே கருத்துரையைக் கவனிக்கும் போது, பொதுமக்கள் பெயரால் சர்க்காரை நடத்தும், காங்கிரஸ்; எவ்வளவு கண்மூடித்தனமாகக் காரியத்தைச் செய்திருக்கிறது என்பது தெரிகிறதே! ஆமை வேகம்! பைல்கள் கட்டுகட்டாக! இலட்சியமற்ற பைல்கள்!! தந்திகளைக் கூடக் கவனிப்பாரில்லை! பதில் போடுவதில்லை! அவ்வளவு மந்தம்! அத்துணை அக்கரையற்ற தன்மை! பொது மக்களின் குரலை அவ்வளவு துச்சமாக மதிக்கிற சுபாவம்! டில்லி, உணவு இலாகாவின் இலட்சணம் இப்படி இருந்திருக்கிறது—இருக்கிறது—உங்கள் முன்ஷியேதான் இதைக்கூறுகிறார். அவர் கூறினார் என்பதற்காக, அவருடைய திறமையைப் பாராட்டி நாலு நாழியாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே தவிர, உணவு இலாகா, எவ்வளவு மோசமாக நடந்துகொண்டு வந்திருக்கிறது என்பதுபற்றி எண்ணி தாக்கப்படவுமில்லை, வெட்கப்படவுமில்லை. உணவு இலாகாவும் காங்கிரசாட்சியிலேதானே இருக்கிறது. மக்களுடைய உயிருக்குக் காப்பளிக்கவேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள உணவு இலாகாவிலே, உங்கள் காங்கிரசாட்சியிலே இவ்வளவு 'அவலட்சணம்' இருக்கிறது. மாகாண சர்க்கார்கள் அனுப்பும் தந்திகளுக்குப் பதில்கூடக் கிடைப்பதில்லை, வாரக் கணக்கில்! பொது மக்களிடம் அன்பு அவ்வளவு இருக்கிறது!! பொறுப்பு இவ்விதம இருக்கிறது!! பஞ்சம் ஏற்படக்கூடும், பட்டினிச் சாவு ஏற்படக்கூடும், உணவு கிடைக்காததால் மக்களிடம் கொந்தளிப்பு கிளம்பக்கூடும் — அப்படிப்பட்ட விஷயம்—அதிலே, இந்தவிதமான 'எருமை'ப் போக்கு இருந்திருக்கிறது! இதை எடுத்துக்கூறினவரை ஏத்தி ஏத்தித் தொழுகிறீர்களே தவிர, இந்த நிலைமைக்கும் காரணம் காங்கிரசாட்சிதான் என்பதை மறைத்துவிடப் பார்க்கிறீர்களே! நாய்க்கடி ஆபத்தானது— இன்ஜக்ஷன் போட்டுக் கொள்ள வேண்டும்-என்றுநடுவீதியிலேபோகி

24

றவன் கூறினுல், "ஆஹா! அந்த ஆசாமியின் புத்தி தீட்சணியமே தீட்சணியம்!" என்றுபுகழ்ந்துகொண்டிருப்பது. வெறிநாய் எங்கே இருக்கிறது அதை எப்படி விரட்டுவது என்றல்லவா கவனிக்கவேண்டும். உணவு இலாகா "மிக மோசமாக" இருந்து வருகிறது என்று முன்ஷி கூறினவுடனே, முன்ஷியே கண்டித்துக்கூறும் அளவுக்குப் படுமோசமான முறையிலே உணவு இலாக்காவை நிர்வகித்த காங்கிரசாட்சியையல்லவா கண்டித்திருக்க வேண்டும்—உண்மையாகவே மக்களிடம் பற்று இருந்தால்! முன்ஷி காங்கிரஸ்காரர் ஆகவேதான் அக்கரையுடனும், திறமையுடனும் பிரச்னையைக் கவனித்தார், அதற்கு முன்பு உணவு இலாகாவை நிர்வகித்தவர், காங்கிரஸ்காரல்ல, ஆகவேதான் 'படுமோசமான' நிலைமை இருந்தது, என்றுவது சமாதானம் கூறிக்கொள்ள வழி இருக்கிறதா? கொடுக்கப்பட்ட தந்திகளுக்கு வாரக்கணக்காக, பதிலே அனுப்பாமல் இருந்துவந்த அந்த உணவு இலாகாவின் நிர்வாகம், உணவு மந்திரி ஜெயராம்தாஸ் தௌலத்ராமிடம்தானே இதுவரை இருந்துவந்தது—முன்ஷிபோலவே அவரும் பழுத்த காங்கிரஸ்காரர்தானே! ஏன் காங்கிரஸ்காரரான உணவு மந்திரியார், இன்னொரு காங்கிரஸ் தலைவர்கண்டு கண்டிக்கவேண்டியவிதமாக நிர்வாகம் செய்து வந்தார்! ஒரு சிறு கண்டனக் குறிப்பாவது தர இசைவீர்களா? திறமைச்சாலிகளைத் தேடிப்பிடித்துப் பதவியில் இருக்கச்செய்யும் திறமைஎமது நேருவுக்கு அபாரம், என்கிறீர்களே, அவர் பார்த்துத்தானே இந்த ஜெயராம்தாஸை உட்காரவைத்தார் உணவுஇலாகாவில்! ஆமை வேகத்திலும்,எருமைப்போக்கிலும்இருந்திருக்கிறதே! இப்படிப்பட்டவர் ஜெயராம்தாஸ், என்று முன்கூட்டித்தெரிந்துகொள்ளும் திறமை நேருவுக்கு இல்லை என்பதும் இந்தச் சம்பவத்தினுலேயே தெரிகிறதே!" — என்று நான் கூறினேன். இருநண்பர்களுக்கும் கோபந்தான் — ஆனுல் பதில் கூற வக்கு இல்லை எனவே, கனைத்துக்கொண்டுமட்டும் இருந்தனர்.

"ஜெயராம்தாஸ் நிர்வாகம் சரி இல்லை என்றுதான் ஏற்படுகிறது" என்று சிலவிநாடிகளுக்குப் பிறகு நண்பரில் ஒருவர் சொன்னுர், சற்று சிரமத்துடன். "அது சரி, அதனுலேதான் முன்ஷியை நியமித்திருக்கிறுர் நேரு" என்றுர் மற்றவர். "அப்படியானுல் முதலிலே நேரு தவறு செய்தார் என்பதைஒப்புக்கொள்கிறீரா"? என்று நான் கேட்டேன் "அது சரி" என்றுர் நண்பர் நேரடியாகப் பதில் கூறுமல். மற்றவர், "எப்படியோ போகட்டும் இப்போது முன்ஷி போட்டிருக்கும் திட்டம் சிலாக்கியமாக இருக்கிறதல்லவா?"—என்றுர். மீண்டும் எனக்குச் சிரிப்பு பிய்த்துக்கொண்டுவந்தது.

"கோபிக்கவேண்டாம் நண்பர்களே! முன்ஷியின் திட்டம் என்னவென்று தெரிந்துகொண்டீர்களா? 1951க்குள் வெளிநாட்டிலிருந்து உணவுப பொருள் இறக்குமதி செய்வது கூடாது — செய்யமாட்டோம் என்ற பழையத் திட்டம்தான் இவர் கூறினதும், கிணறு வெட்டுவது, உரம் தருவது முதலிய பழைய பேச்சுகளைத்தான் இவரும் கொட்டியிருக்கிறுர். சாலைகளிலே, வீட்டு முற்றங்களிலே, கிடைத்த இடத்திலெல்லாம் மரம் நடவேண்டும் என்ற பழைய திட்டமேதான் இவரும் பேசுகிறுர்—ஒன்றுமட்டும் புதிது—முன்ஷி முத்திரை விழுந்திருக்கிறது திட்டத்தில! ஏன் விரைக்க, விரைக்கப் பார்க்கிறீர்கள். புதிய உணவு மந்திரி, மர மகோத்சவம் நடத்தவேண்டுமென்று "மகாஜனங்களைக்"கேட்டுக்கொண்டிருக்கிறுர்.

அந்த மகோத்சவம் எப்படி இருந்தால் சிறந்ததாக இருக்குமென்றும் கூறி இருக்கிறுர். விதையும் சிறு செடியும், மண்ணைக் கெல்லும் கருவியும் தண்ணீர் வாளியும் மட்டும் போதா, அவர் கூறும் மரமகோத்சவத்துக்கு! மிருதங்கமும் புல்லாங்குழலும் வேண்டும்!!"—என்றேன் நான்.

"மிருதங்கமும் புல்லாங்குழலுமா!—எதற்கு? மரமகோத்சவத்துக்கு......!"—என்று நண்பரில் ஒருவர், உண்மையாகவே குழப்பத்துடன்கேட்டார். "ஆடவரும் பெண்டிரும், முதியோரும் சிறுவர்களும், செடி நடவேண்டும், மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றவேண்டும், மரங்களை வணங்கவேண்டும்" என்று கூறுகிறுர் முன்ஷி—வேம்பும் அரசம், ஆலும் துளசியும், வில்வமும் வணங்கும் நாட்டிலே, அந்நாகரீகத்தைக் காப்பாற்றும் நன்னெறி(!)யைத் தழைக்கச்செய்யும் நோக்கத்துடன் உள்ளவர்தானே மந்திரியாக முடிகிறது!" என்று நான் கூறினேன், என் குரலிலே கேலி இருந்தது, நண்பர், "அவ்வளவு அக்கரை காட்டவேண்டும் என்பதற்காக மரத்தை பூஜியுங்கள் என்று கூறி இருந்திருப்பார்"—என்று விளக்கம் தந்தார்.

"அவ்வளவுடன் நின்றுவிடவில்லை நண்பர்களே! உங்கள் முன்ஷி!! பிருந்தாவனத்தைக் கவனப்படுத்திக் கொள்ளுங்கள். பிரியமுள்ளவர்கள், குழல் ஊதி, மிருதங்கத்தைக் கொட்டி, பிருந்தாவனம் கொண்டாடுங்கள்!! என்றும் கூறி இருக்கிறுர். ஜுலை முதல் வாரம் பூராவும் இந்த மகோத்சவமாம்!! இதுதான் புதிய உணவு மந்திரியின் புதிய திட்டம்! ஆகவே அருமைக் காங்கிரஸ் நண்பர்களே ஆளுக்கொரு மிருதங்கமும் குழலும் எடுத்துக்கொண்டு ஜுலை முதல் வாரத்தில்,

சேடியை நடுவோம்
கோபாலா!
மரமாய்க் காண்போம்
கோபாலா!
பூவைக் காண்போம்
கோவிந்தா
காய் கனி தின்போம்
கோபாலா!

—என்று பாடி ஆட வேண்டியதுதான்" என்று நான் சொன்னேன். என்னிடம் விடைபெற்றுக்கொள்ளாமலே நண்பர்கள் புறப்பட்டனர். அவ்வளவு கோபம் அவர்களுக்கு.

ஜுலை முதல் தேதியிலிருந்து ஏழாம் தேதி வரையில் பிருந்தாவனம்—இங்கு—மந்திரி கூறுகிறுர். நண்பர்களே! ஜுலை 14ந் தேதி பிரான்சு நாட்டிலே புரட்சி நடைபெற்றது!! இப்படிப்பட்ட "மகோத்சவங்கள்" நடைபெற்றுக் கொண்டிருந்த பிரான்சிலே குழலூதி முரசு கொட்டி கோலாகலங்கள் சேல்விழியாருடன் கூத்தாடிக் காலந்தள்ளிக்கொண்டு, ஏழைகளைப் புழுப்போலத் துடிக்கச் செய்தனர்!...... ஆம்! ஜுலை 14 வருகிற வரையில்!

உலகிலே பல்வேறு இடங்களிலேயும் இந்த ஆண்டும், வழக்கம் போல் "ஜுலை 14"—கொண்டாடுவர்—மக்

(அடுத்த பக்கத்தில்)

திராவிட நாடு

ஞாயிறு] 28—5—50 [காஞ்சி

கதம்பக் கச்சேரி

✻

வாளையுருவுவர்—வாய் குளறுவர்! விட்டேனா பார் என்று துடிப்பர் விவேகியல்லவோ என்று கூறுவர்! வீரம் எழும்பும் கூடவே கூக்குரலும் ஒலிக்கும்! கோபிப்பர்—குதூகலிப்பர்! பாம்பாகச் சீறுவர்—உடனே பசுவாக உலவுவர்!

X X X

தமிழுக்கு ஆபத்து........

இந்தி அவசியம் கற்கவேண்டும்...

இந்தி எதிர்ப்பு நியாயம் நிரம்பியது......

தமிழ் தனிப்பெருமை வாய்ந்தது

சமஸ்கிருத ஞானமில்லாவிடில் தமிழ்க் கலாசாரம் பூரணமாகாது.

கடந்த வாரம் கோவைமாநகரில் கூடிக்கலைந்த தமிழ் வளர்ச்சிக் கழக மாநாட்டில் 'பெரிய மனிதர்கள்' சிலர் சிந்தியச் சொற்களைக் கண்டதும், தலைப்பிலே நாம் தந்திருக்கும் நினைவு எழுந்தது நமது இதயத்தில். நமக்கு மட்டும் என்றல்ல, நண்பர்களிலே பலருக்குக் கூடத் தோன்றலாம், 'இதென்ன வேடிக்கை—தமிழுக்கு ஒருபாராட்டு! இந்திக்கு ஒரு வரவேற்பு! சமஸ்கிருதத்துக்கு ஒரு சரணாகதி! சம்பந்தா சம்பந்தமில்லாமலிருக்கின்றனவே? தமிழ்வளர்ச்சிக்கும் இத்தகைய கூற்றுகளுக்கும் என்ன பொருத்தம்' என்று—பல விதமாக.

கோபம்,உடனேகுதூகலம்! வீரம், உடனே சோகம்! நிமிடத்துக்கொரு பாவனை, நேரத்துக்கொரு பேச்சு!—இத்தகைய ஆளைக் கண்டால், சித்த சுவாதீனமில்லையோ இந்த ஆசாமிக்கு என்று கேட்கத் தோன்றும்.

சித்தம் கெட்டு பித்தம் தலைக்கேறினால் மூளை ஒரு நிலையிலிருக்காது. வார்த்தைகளில் வர்ணஜாலங்கள் தோன்றும், சொற்கள் தொடர்பில்லாச் சங்கிலியாகும், பேச்சு அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூட்டை போல அங்கொன்றும் இங்கொன்றுமாக அர்த்தமில்லாமல் விழுந்து புரளும்!

கோவையில்கூடிய தமிழ் வளர்ச்சி மாநாட்டில், தலைப்பிலே நாம் தந்திருக்கும் "தங்கத்துளி"களைச் சிதறியவர்கள் இந்த இரகத்தைச் சேர்ந்தவர்களல்ல; பெரிய மனிதர்கள்! துவளா நாவினர், துரைத்தனம் நடாத்திய சிறப்பினர், ராஜபோகத்தில் கிடந்துழலும் வாய்ப்பினர்! பணம் மூட்டை மூட்டையாகக் கிடக்க, பக்கத்தில் பல்லிளித்து பல பேர் நிற்க, வாய்ச் சொல்லை எதிர்பார்த்து அரசாங்கமே கிடக்க...... அத்தகைய 'பெரிய மனிதர்கள்'!

பெயர் வரிசையைப்பார்த்ததுமே, இவர்கள் கூடப்புறப்பட்டு விட்டார்களே, இனிஎன்னகுறை தமிழுக்கு? ராஜா 'சர்'ரும், மாஜியமைச்சரும், ஆலைச் சீமானும் அழகிழந்து வரும் தமிழைச் சிங்காரிக்க வந்து விட்டனரே, தமிழுக்கு இனி யோகம் தான்! என்று, நம் இதயமெல்லாம் குளிர்ந்தது. மண்ணில் வீசப்பட்ட மாணிக்கத்தை அரியாசனம் அமர்த்துவார்கள் – அதற்கான வசதியும் வாய்ப்பும் படைத்தவர்களல்லவோ இவர்கள்! என்ற ஆசையும் உதயமாகியது.

இரும்புப் பெட்டியையும், இலட்சத்தையும் 'சிறிது' மறந்துவிட்டு, இத்தகைய ஊருக்குழைக்கும் உத்தமர்களாகப் புறப்பட்டு விட்டனரே! என்னே இவர்தம் தகைமை! பெருமை!! என்றெல்லாம் நினைக்கத் தூண்டியது – கவலை இனி மாயும், அலை இனி ஓயும், தமிழ் இனி தழைக்கும் அதற்கான வகை கிடைக்கும் என்ற ஆசையின் விளைவால்!

ஆனால், நாமெல்லாம் விரும்புகிற படி நடக்கும் 'சராசரி' மனிதர்களா அவர்கள்—இல்லையே! எனவே தமிழ் வளர்க்கக் கிளம்பி 'கதம்பக் கச்சேரி' நடத்திவிட்டு கலைந்திருக்கின்றனர் இக் 'கனவான்கள்.'

X X X

சிதைந்து சீரழியும் தமிழைச் சிங்கார நிலைக்கு வைக்க வேண்டுமென்ற ஆசையும், அளவிலா முயற்சியுமுடைய சிலரைத்தவிர, கோவையிலே கூடிய 'பெரிய மனிதர்'களின் பேச்சுகள் – சொல் வீச்சாகக் கூட இல்லை – அசல் கதம்பக் கச்சேரி போலவே இருந்திருக்கிறது! ஒருவர் திராவிடரியக்கத்தாரைத் தட்டிக் கொடுப்பதுபோல! அதே ஆள் சமஸ்கிருதத்தைப் போற்றி, வேறோரிடத்தில்! இன்னொருவர் இந்தியின் பெருமை குறித்து! மற்றொருவர் இந்தியின் ஆதிபத்தியம் கூடாதென்று!—கூடிய பெரிய மனிதர்கள், ஒவ்வொரு விதமாகப் பேசியிருக்கின்றனர், முன்கூட்டி ஏற்பாடு செய்துகொண்டதுபோல!

எவர் இதயத்தையும் துன்புறுத்தக்கூடாது என்ற பரந்த மனப்பான்மையோ, என்னவோ, கூடிய 'பெரிய மனிதர்கள்' ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில பேசியிருக்கின்றனர் – கதம்பக் கச்சேரி நடத்தியிருக்கின்றனர்!

X X X

தமிழ் – புயலுக்கும் தீக்கும் நடுவில் அகப்பட்ட மாதைபோலிருக்கிறது! பாம்பும் புலியும் உலவிடும் காட்டில் கண்கட்டி விடப்பட்ட தாயைப் போலத் தவித்துக் கிடக்கிறது! தருக்கரின் செயலால், விபீடணர்களின் விசித்திர ஏற்பாடுகளால் அணுவணுவாகச் சித்திரவதை செய்யப்படுகிறது!

இக்கோரக் காட்சி, கொடுமைப் பலிபீடம், வெட்டி சாய்க்கப்பட வேண்டும். வேரறுத்து, புதுநிலை பூக்கப் பாடுபடவேண்டும். அதற்கு எண்ணத்தில் தூய்மையும், ஊருக்குழைக்கும் ஆர்வமும் கொண்ட மறவர்கள் தேவை; 'மண் பிம்பங்களல்ல' பட்டுப் பூச்சிகளல்ல, தேர்தல் வெட்டுக்கிளிகளல்ல; கதம்ப மனிதர்களல்ல; 'பெரிய மனிதர்'களல்ல!

✻

(முன் பக்கத் தொடர்ச்சி)

களின் மாண்பை விளக்கவும், அம்மாண்பினை மதியாத மமதையாளர்களை புரட்சிபொசுக்கித் தள்ளிவிடும் என்ற உண்மையை விளக்கவும் உல கெங்கும் இந்த அறிவுரை பாவுகிறது! இங்கே உங்கள் மந்திரியார் பிருந்தாவனம் செய்யச் சொல்கிறார் ஆகட்டும், ஆகட்டும், காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுங்கள்! ஆட வேண்டிய பிருந்தாவனங்களை எல்லாம் விரைவாக ஆடிவிடுங்கள் காலம் வேக வேகமாக மாறுகிறது நண்பர்களே, மிக வேகமாக மாறுகிறது!!—என்று சொன்னேன்.

"சரி—சரி—" என்று கூறிவிட்டு போயினர் என் நண்பர்கள்—கோபமாக.

✻

மழையில்லை—வழியென்ன?

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கோடையில் மேற்கில் பெய்யும் அதிக மழை நீரைக் கொண்டுவரும் காவேரியாற்றில் குளிர் காலத்து மழையால் அதிக நீர் வர வழியில்லை. இடையில் ஒண்ணரைத் திங்கள்கள் மழையும் கிடையாது. இருந்தும் மேட்டூர் அணைக் கட்டப்பட்டது. 1934-ல் கட்டி முடித்த ஸ்டான்லி 'ரிஸர்வாயரில்' 5,300 அடி நீளமுள்ள அணைக் கட்டினால் சுமார் 60 சதுர மைல நீர் தேங்குகிறது. இத்தோடு புதிதாக வெட்டப்பட்ட மேட்டூர் கால்வாய் வேறு! மழை பெய்யாவிட்டாலும், பெய்கிற நேரத்தில் சேர்த்து வைத்துப் பிறகு பலன் காணலாம் என்ற அடிப்படை உண்மையின் விளக்கம்தான் இத்திட்டம்.

இதைப் பார்த்த பிறகாவது சேர்த்து வை, பிறகு செலவிடு என்ற நல்ல பாடத்தை மனதில் வைப்பார்களா, நமது ஆளவந்தார்கள்?

மத்திய சர்க்கார் இத்தகைய அணைக்கட்டுத் திட்டங்கள் போட்டுள்ளனர். இவைகளில் ஏழு திட்டங்கள் தொடங்கப்பெற்றுவிட்டன. பன்னிரண்டு ஆய்வுக் கூடாரத்தில் கிடக்கின்றன.

அவர்கள் ஆராய்ச்சியிலே விட்டிருக்கிற திட்டங்களிலே நமது மாகாணத்திலே, ஒன்று ராமபாதசாகர் திட்டம்! மற்றொன்று கிருஷ்ணா பெண்ணாறு திட்டம்! இவைகள் பெருந் திட்டங்களாம்.

செய்யட்டும், வீணாகப் பேசிக் கிடக்காமல்! காகிதத் திட்டங்களால் காய்ந்து கிடக்கும் நிலங்கள் விளைந்து விடாதே என்பதுதான் நம் கவலை. வீண்பேச்சிலும், விளம்பரத்திற்கான 'வெத்து வெட்டு'த் திட்டங்களைப் போட்டு வேதனையை வளர்க்காமல், வளத்தைப் பெருக்க வகையுள்ள திட்டம் தீட்டி, நாள் கடத்தாமல நடத்திவிக்க வேண்டும் என்பதே நம் ஆசை.

உலர்ந்த நா செய்கிற விண்ணப்பம் அதுதான். ஒட்டிய வயிறு கேட்டுக்கொள்கிற வேண்டுகோளும் அதுவே!

✻

1947—48-லிருந்து 1951—52 வரை நடத்தப்பட வேண்டிய ஐந்தாண்டு திட்டம் போட்டிருக்கிறார்கள். 7 கோடி செலவில் 2½ இலட்சம் ஏக்கர் பாயக்கூடிய 300 சிறு திட்டங்கள் மேற்கொள்ள முடிவு செய்துள்ளார்கள், சென்னை சர்க்கார்.

100 திட்டங்கள், 1.85 கோடி செலவில் செய்ய ஏற்கனவே உத்திரவு பிறப்பித்துள்ளார்கள்.

திட்டம் போடுகிறார்கள், தினம், தினம்! பொருளாதார நிபுணர்கள் தங்கள் திறமையைக் காட்டுகிறார்கள் ஆனாலும் 'உடுமலை பேட்டை' உண்டாகிறது! அவுன்ஸ் அரிசிதான் கிடைக்கிறது! 'சர்வோதயம்' பேசுகிறோம். ஆனாலும் தேவையுள்ள உணவைப் பெற வழியில்லை.

அண்மையில் திருநெல்வேலியில் நடந்த மிராசுதாரர்கள் கூட்டத்தில் மணிமுத்தாறு திட்டம் பற்றிப் பேசினார்கள். இம்மாதிரி திட்டங்கள் பல உண்டு — அமராவதி, ஆரணி ஆறு, சட்டனை, புள்ளம்பாடி, சாந்தனாறு, வைகை என்று!

மணிமுத்தாறு திட்டம் வெற்றி பெறவேண்டும். பெற்றால்தான் பற்றாக்குறை தீரும். வயிறார மக்கள் உண்ணவழி பிறக்கும். எல்லாம் சரி, பணத்திற்கு என்ன செய்வது? இந்த திட்டத்தை விரைவிலே தொடங்கி வைக்க சர்க்கார் ஆவலுடனிருக்கிறது, என்றுசொல்கிறார் மராமத்து மந்திரி கனம் பக்தவச்சலம், நாட்டவரும் அப்படித்தான் நினைக்கிறார்கள்!

மணிமுத்தாறு திட்டத்திற்கு 3 கோடி வேண்டும். இந்த ஆண்டிற்கு ஒதுக்கியுள்ள தொகை 15 கோடிதான். எதிரிலுள்ள திட்டங்களின் எண்ணிக்கையோ 300. என்ன செய்வார்கள்?

மத்திய சர்க்காரோ, உதவிசெய்ய மறுத்துவிட்டது. இவர்கள் எதிர்பார்த்தார்கள், என்னென்னவோ! அபிவிருத்தித் திட்டங்களுக்கென கடன் கொடுப்பதற்கில்லை யென்று சொல்லிவிட்டது. அதோடு நிறுத்திக்கொள்ளவும் இல்லை.

நிதானம் வேண்டும், மூலதனங்களைச் செலவிடுகிறபொழுது—புதுத் திட்டங்களின் பெயரால்! — என்று எச்சரிக்கை விட்டு விட்டார்கள். 'லகான்' அவர்கள் கையில்- இழுத்து நிறுத்த ஏன் தயங்குவார்கள்?

மாதம் மும்மாரி பெய்ததாஎன்று மன்னன் கேட்பானும். ஆகா....... அப்படியே பெய்தது மகராஜ்...... என்பானும் மந்திரி! அத்தோடு முடிந்துவிடுமாம், நீர்ப்பாசன நிர்வாக விசாரணை! பிறகு போய்விடுவானும் அந்தப்புரத்திற்கு! இப்படிக் கூத்துகளில் பார்க்கிறோம், ஆட்சி முறையின் அலங்கோலத்தை, அவலட்சணத்தை!

மத்திய சர்க்கார் நிதானம் வேண்டும் என்று நிறுத்திக்கொள்கிறது. மாகாண சர்க்கார், பணமில்லையே என்று மென்று விழுங்குகிறது வார்த்தைகளை!

இம்மாதிரி 'கைவிரிப்பு' நேரங்களில்தான் நம்மைப் பார்க்கிறார்கள், அர்த்தத்தோடு! இந்தப் பார்வை விரியப் போகிறது முதலில் வியப்பால், பிறகு விளக்கத்தால், கடைசியில் கோபத்தால், என்பது நாம் அறிவோம். ஆகவேதான் பொறுத்திருக்கிறோம். அவர்கள் மத்தியத் தொடர்பை அறுத்தெறிய போர் தொடுக்கும் நாள் அதிகதூரம் இல்லையென்பதை நாம் உணர்ந்துள்ளோம். காத்திருக்கிறோம்.

நாட்டிற்கு சுதந்திரம் தந்தவர்கள் உலர்ந்த நாக்குக்கு சுதந்திரம் தரட்டும். வரண்ட வயல்களுக்கு வழிகாட்டட்டும்! உலர்ந்த நாவுக்கு அவர்கள் 'முதல் உதவி' செய்யட்டும். வரண்ட வயல்களுக்கு "புது வாழ்வு" அளிக்க முன்வரட்டும்.

மாமழை போற்றட்டும். ஆனால், வருணஜபம் வேண்டாம், ரிஸ்ய சிருங்கரின் காலமுறையைக்கையாள வேண்டாம், பாவிகள் நிறைந்துவிட்டார்கள், பருவமழை கெட்டுவிட்டது என்று பைத்தியக்கார வாதம் எழுப்பவேண்டாம். நீரைத் தேக்கி, வேண்டும்பொழுது குடிக்கவோ, நிலத்திற்குப் பாய்ச்சவோ, வேறு எதற்குமே பயன்படச் செய்ய வழி வகுப்பார்களா — அல்லது இந்நாட்டவரின் விழிகளில் நீரைத் தேக்கிப் பழிசுமக்கப் போகிறார்களா?

மழை பெய்யவில்லை யென்கிறார்கள். ஆனால் தண்ணீரின்றி மக்கள் எப்படி வாழமுடியும்? ஆளவந்திருப்போர் இதற்குப் பதில் சொல்லவேண்டும் மழையில்லை! சரி, வேறு வழியே இல்லையா?

✻

மழையில்லை! — வழியென்ன?

★ ★ ★

"சுவாமி, காட்டை விட்டு எங்கள் நாட்டிற்கு வரவேண்டும்"

என்று கொஞ்சுமொழி பேசி அந்த மாமுனியின் கரத்தைப் பிடித்திழுத்தாள், அந்த கழற்கண் சுந்தரி!

"நாட்டிற்கா......முடியாது! என் தந்தையை, ஆசிரமத்தை, அழகு வழியும் மலர்க் கொத்துகள் மணம் பரப்பிடும் சோலையை, கூவும் குயிலை, ஆடிடும் மயிலை, மிரண்டோடும் மானை...பிரிய முடியாது!"

என்றார் அந்த 'வாலிப' சந்நியாசி!

"என்னை மட்டும் பிரிந்து விடுவீர்களா?...கல் மனது உங்களுக்கு!... நான் எப்படி உங்களைப் பிரிவேன்!"

என்று கண்களில் மழையை வரவழைத்தாள்.

சுந்தரியின் இங்கித மொழியில் மயங்கிக் காட்டை விட்டு நாட்டிற்குச் சென்றார் அந்த மகரிஷி. மழை பொழிந்தது. வரண்ட வயல்களில் வளங் கொழித்தது. நாடு செழித்தது.

ரிஸ்யச்ருங்கர் என்றொரு முனிவர். அவர் கால்களில் சக்கரம் இருந்ததாம். ஆகவே, அவர் தாள் பட்ட இடமெல்லாம் மழை பொழிந்து வளம் பெறுமாம்.

பருவ மழை கெட்டுப் பாலைவனமான தன் நாட்டைக் காக்க, அம் முனிவரை அழைத்துவர முயன்றும் முடியாமல் தன் 'மோகனாஸ்திரத்தை ஏவினானாம். ஆமாம், அழகுப்படையை அனுப்பித் தன் எண்ணத்தை ஈடேற்றிக் கொண்டானாம் அம்மன்னன்!

மழை பொழிய, மகரிஷியின் பாத தூளி....புராணகால அறிவு இப்படி!

* * *

ஆம், இப்பொழுது எங்கும் பருவ மழை கெட்டு, வளங் குறைந்து, நலம் மறைந்து, நல்வாழ்வு இறந்து நாம் தவிக்கிறோம். வயல்களில் பசுமை இல்லை. ஆறுகளில் நீர் இல்லை. ஏரிகள் வரண்டு கிடக்கின்றன. குளங்களோ, கொட்டியும் ஆம்பலும் வாடிக் கிடக்க, நட்பிற்கு இலக்கணம் சொல்கிறது, நாவரட்சியைப் போக்காமல்!

நீரின்றி யமையா துலகு என்று குறள் பாடுகிறோம். உரை சொல்லி, 'விசேடப் பொருள்', விளக்கவுரை, விரிவுரை நிகழ்த்துகிறோம். ஆனால் நீரில்லாத நிலையை மாற்ற முடியவில்லை. ஐம்பூதங்களில் அதுவும் ஒன்று என்று சொல்லத் தெரிகிறது ஆனால் அது கிடைக்காத நோக்கில் கிடைக்கச் செய்ய வழி தெரியவில்லை.

சில இடங்களிலே தண்ணீரை விற்கிறார்கள், குடங் கணக்கில! சில இடங்களில் அதுவுங் கிடைக்காமல் அடித்துக் கொள்கிறார்கள். குழாயடிச் சண்டைகள், குடுமிபிடி யுத்தம், நான்தாண்டி முன்னாலே வந்தேன், நீ என்னடி முந்திக் கொள்கிறாய்... என்ற வாயடி வம்புகள்...மலிந்துவிட்டன!

நீர் இல்லை. அந்த இல்லாமையைப் போக்க நமக்கு திறமையில்லை! ஆனால் நம்மை ஆளவந்திருக்கும் 'அண்ணாச்சிமார்கள்' நீட்டிக் கூட்டிப் பேசுவதிலேயும் குறைவில்லை.

X X X

Water, Water, Nowhere
Want of water everywhere

இப்படி, நீரில்லாத நிலைமையை, கிண்டல் நாறில், கேலிச் சொற்களைச் சேர்த்துக் கோத்துத் தருவதுண்டு. இப்பொழுது அத்தகைய நிலை யிருக்கிறது, நாட்டின் பல முக்கிய இடங்களில்! இராசிபுரத்திலே நீரின்மையைப் போக்க முடியவில்லை. நகராண்மைக் கழகம் புதியதிட்டம் போட்டு, போரிங் கிணறு வெட்ட முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது! உடுமலைப் பேட்டையில் தண்ணீர்ப் பஞ்சம், தலைவிரி கோலமாக பயங்கரக் கூத்தாடுகிறது. ஒன்பது, பத்து மைல்களுக்கப்பால் சென்று நீர் கொண்டுவந்து விற்கிறார்கள். காங்கிரஸ் கமிட்டித் தலைவரே 'முகாரி' பாடியிருக்கிறார். பள்ளியாசிரியர் தண்ணீர் அலவன்சு கேட்டுவிட்டார்கள்! தண்ணீர் 'தட்டுப்பாட்டை' ஒழிக்க முடியவில்லை.

மந்திரி பக்தவத்சலம் பார்த்தார், பரிதாபத்தோடு! 'கவனிப்போம்...' என்று கூறினார், வழக்கப்படி! வாடிக் கிடக்கும் பயிர்களைக் காட்டினர் அவர் தாமரைமுகம் கூம்பிவிட்டது! வரண்டிருக்கும்நீர்த்தேக்கத்தையும் விடவில்லை. மந்திரியாரின் சிந்தனைக்கும் அதையுங் கொண்டுவந்தனர். ஆமாம்......என் செய்வது? வருந்துகிறேன்......என்று இழுத்து மழுப்பினார்...விட்டுவிடவில்லை. ஊரார் வரி வஜா கேட்டனர்....செய்ய முயற்சி எடுப்போம்......என்றார் மந்திரியார் செய்யவில்லை முழு வரியையும் வசூலிக்க வந்துவிட்டனர், சர்க்காரின் 'நட்சத்திரயர்கள்'!

குடிக்க நீரில்லை. குமுறுகிறார்கள் மக்கள். கொடுத்துவிடுங்கள் வரியை ......என்று கூசாது கேட்கின்றனர் ஆட்சியாளர். கோணாது, நாணாது கேட்கின்றனர், குடி தண்ணீர்கொடுக்கவும் வழி தெரியாத, 'வக்கில்லாத' ஆளவந்தார்!

✲

கொடியவெய்யில், ஆகவே வற்றிய நிலையைக் காண்கிறோம்! புரிகிறது நமக்கு—எனினும் குடிக்கவும் நீரற்ற கொடுமையை எப்படிச் சகிப்பது? பருவ காலங்களில மழை பெய்தால் இந்த நிலையிருக்காது ஆனால் பருவ மழை கெட்டுவிட்டது. குறிப்பிட்ட காலங்களில் மழை பெய்வதில்லை ஆகவேதான், தண்ணீருக்குத் தாளம் போடுகிறோம். தாகம் போக்க இராகம் பாடுகிறோம்!

இயற்கை 'தேவி' தன் இச்சைப்படி அளிக்கும் 'வரங்களிலே' ஒன்றுதான் மழையென்பதை உணர்ந்திருக்கிறோம்! ஆனாலும் மழைபொழியவில்

லையே, நீர் கிடைக்கவில்லையே என்று அழுகின்ற உழவர்களைப் பார்க்கிறோம். இந்த மழை இப்படி பழி வாங்குகிறதே என்று ஒழுகு நீர் 'விழிகளை' சந்திக்கிறோம், வயலோரங்களில், வாய்க்கால் பக்கங்களில், ஆற்றங் கரைகளில், அணைக்கட்டுகளின் அருகில்!

மழையை அவன் இழுத்து வர முடியாது. ஆனால் அவனது மனைவி அடிக்கடி தன் கண்களிலே மழை பொழியுங் காட்சியைக் காட்டும் பொழுது கலங்கிவிடுகிறான் ஓடுகிறான் வரண்ட வயல்களை நோக்கி... ஒடிந்துவிடுவேன் என்று பயங்காட்டும் எலும்புக் கூடுகளாக இருக்கும் எருதுகளைத் தட்டியோட்டி ஆழக் கிணறுகளிலிருந்து நீரை இழுத்து ஊற்ற முயற்சிக்கின்றான். தன் வியர்வையை அத்துடன் சேர்க்கிறான். மனைவியின் கண்ணீரையும் கூட்டுகிறான், அந்த நீருடன்! அப்படியும் பயிர் செழிக்கவில்லை. வானத்தைப் பார்க்கிறான். அவன் முகம் வாடிவிடுகிறது! 'மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீர்......' என்று ஏற்றப்பாட்டு பாடி இறைத்துப் பார்க்கிறான் நீரை, அவன் முகத்திலே வியர்வைத் துளிகள் தூங்காமல், துடி துடித்தோடுவதை வழித்தெறிவான். ஆனாலும் நெற்பயிர்கள் 'தேவை' விளம்பரம் போடும், கரும்புகள் 'பஞ்ச நிவாரணம்' என்று சாவுக்கதை சொல்லும்!

ஏழை உழவன் உழைக்கத் தயங்குவதில்லை. ஆனாலும் நீரின்றி நிலம் பயிரிட முடியுமா!

மழையில்லையே என்று ஏங்கும் உழவன் தன் மட மனதிற்குத் திருப்தி தேட, 'கொடும்பாவி' கட்டி யிழுக்கின்றான். கொட்டும் பறையொலியால் தன் மனதிற்குச் சமாதானம் தேடுகிறான். ஆனால், அவன் படியாதவன், பண்படாத உள்ளமுடையவன்! மூடநம்பிக்கையின் இரும்புப் பிடியில் மாட்டித் தவிக்கிறான்.

ஆனாலும், அதையே கேலிபேசி, அவனைத் திருத்தவேண்டும் என்று துடிக்கிறது அறிவுலகு ஐயோ...... என்னத்தைச் சொல்வது! மழை பெய்யாததற்குக் காரணம் நல்லவர்கள் இல்லையாம், பாவிகள் 'மலிந்து' விட்டார்களாம். இப்படி 'மதியூக' மந்திரிகள் பேசினால் என்ன செய்வது? நமது முன்னாள் முதல்வர், இப்படித்தான் சொன்னார், மழை பெய்யாததற்குக் காரணம்! நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்பார்கள் 'நல்லவர்' ஒருவரையுமே உண்டாக்க முடியாத ஒரு ஆட்சிக் குழு, அதில் 'வக்கணம்' பேசும் மந்திரிகள் பத்துக்குமேல் என்று மக்கள் பேசுவார்களே என்ற நினைப்பில்லாமல், பாவிகள் மலிந்து விட்டார்கள், ஆகவே பருவமழை கெட்டு விட்டது என்று!

ஆளும் பொறுப்பைத் தாங்கிடுவோர் இப்படி அறியாமையில் முழுகிவிட்டால் 'புரோகித புத்தி' ஏன் புறப்பட்டு வராது, புதுஉறவு கொண்டாட, புதுவகை உடையோடு, நடையோடு! மழையின்மைக்குக் காரணம், 'முகத்துப்பிறவிகள்' செய்யத் தவறிய வருணஜபந்தான் என்று கொஞ்சமும் நெஞ்சில் பயமின்றி, நாவில் நடுக்கமின்றி, வாயில் குளறலின்றி கூறினார்கள்—கூறுகிறார்கள். வாய்ப்புகிடைத்த நேரத்தில் வருணஜபம் நடத்துகிறோம் என்று பணம் 'தண்டி' தங்கள் பிழைப்பை 'பழைய பாணியில்' மீண்டும் ஆரம்பித்து விட்டார்கள். அங்கே, யாகம், இங்கே யோகம், என்று தொடங்கி விட்டார்கள்! தாகத்தைத் தணிக்க யாகமும், ஜபமும் செய்கிறார்களாம்! பழைமை, போரிடக் கச்சை கட்டி விட்டது. நல்லகாலம், மந்திரிமார்கள், ரிஸ்யச்ருங்கரை அழைத்துவர, ஊர்வசி அரம்பையர் போலிளம் மங்கையர் படை தேடவும் இல்லை. அல்லது வருணஜபம் செய்ய ஆண்டு பட்ஜட்டியில நிதி ஒதுக்கவில்லை நமது பணம் செய்த 'புண்ணியம்' தப்பித்துக் கொண்டது, இந்தக் காட்டுத் தனமான காரியத்திலே சிக்கிச் சீரழியாமல்! ஆனாலும் 'பஞ்சாங்கங்கள்' பயப்படாமல வேலை செய்கின்றன. சில தினங்களுக்கு முன்னால் பெங்களூரில் மழைவேண்டி தண்ணீரில் தவமிருந்த காட்சியைப் பத்திரிக்கைகளில் போட்டனர்.

மேகங்களைக் கட்டியாளும் இந்திரனையும், மழையைப் பொழிந்து வாழ்வைச் செழிக்கச் செய்யும் வருணனையும் எண்ணுகின்ற அளவு வாழ்க்கைப் பிரச்சினையின் சாதாரண உண்மைகளை உணருவதில்லை,

வேண்டிய நேரத்தில், மழை பொழிவிக்கக் கூடிய முறையைக் காண மேலை நாடுகளில் முயற்சி செய்தார்கள். வெற்றியுங் கண்டுவிட்டார்கள். விமானங்களிலிருந்து பனிக் கட்டிகளைத் தூவி, மேகமண்டலங்களில் குளிர்ச்சியைத் தடவி, கொட்டும் மழையாக்கும் திட்டத்திலே அவனி முழுவதும் ஆச்சர்யத்தால் இதயங்குலுங்கி பாராட்டிடும் அளவிற்கு வெற்றியை எட்டிப்பிடித்து விட்டார்கள். விஞ்ஞானம், அங்கு இந்திரனாக, வருணனாகக் காட்சியளிக்கிறது. இங்கு ஜபம் செய்கிறார்கள், அங்கு ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆகவேதான் அங்கு வாழ்கிறார்கள். நாம் தாழ்ந்துகிடக்கிறோம்.

அந்த அளவிற்குக்கூடப் போக வேண்டும் என்று சொல்லவில்லை, விருப்பம் இருந்தாலும்! வாழ்க்கைப்பிரச்சினைகளின் 'அரிச்சுவடி' கூடப்புரட்டத் தெரியாமலிந்தால் நாம் வருந்துகிறோம்.

X X X

'மலையைப் புரட்டி விட்டோம்' எலியைப் பிடித்து விட்டோம்!..., என்று கூவுகிறார்கள்—கோபுரத்து மீது தாவுகிறார்கள்! எனினும் இன்னமும் தும்பிக்குக் கூழைக் கொடுக்க முடியாமல் திணறுகிறார்கள். குமுறும் அடிவயிற்றிற்குச் சமாதானம் சொல்கிறார்கள், குமுறலைப் போக்காமல், கொடும் பசியை நீக்காமல்! அளவரிசி தருகிறார்கள், ஆனாலும் ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடுகிறார்கள்! உலர்ந்த நாவுக்கு ஒரு 'முனார்' நீர் தரமுடியாமல 'முக்கி முனகி'த் திண்டாடுகிறார்கள், இருந்தாலும் விடுதலை, விடுதலை என்று முழங்குகிறார்கள்! ஒட்டிய வயிற்றிற்கும், உலர்ந்த நாவுக்கும் விடுதலை கிடைக்கவில்லை, இன்னும்! எனினும் உரிமையுள்ள நாட்டில் வாழ்கிறோம் என்பதையுணர்கிறபொழுது வேதனை இரட்டிக்கிறது, விம்முதல் முற்றி அழுகையாகிவிடுகிறது! சுதந்திர நாட்டில் சோற்றுக்கும், நீருக்கும் தவிக்கிறோம் என்றஎண்ணம் பிறந்தவுடன் நீர் கண்களுக்குத் திரையிடுகிறது, இதயம் வேதனைகீதம் இசைக்கிறது!

உணவுப் பெருக்கம் அதிகரிக்க வேண்டும் என்று ஓயாமல் கூறுகிறார்கள், தாங்கள் ஊர்சுற்றித்திரிகிற பொழுதெல்லாம் — நமது 'மதியூக'

மந்திரிகள்! ஆனால் அவர்கள் கண்களில் ஏராளமாக இன்னும் பயிரிடக்கூடிய நிலங்கள் இருப்பது படாது. அதற்கு ஏற்ற நீர்வசதி தேவை என்பதும் புரியாது, புரிந்தாலும் அதற்கேற்ற திட்டமிட்டுக் காரியம் செய்யமாட்டார்கள், காரியம் செய்யமனமிருந்தாலும், மார்க்கமிருந்தாலும், 'பணமில்லை,' என்று பல்லவிப் பாடி நிறுத்திவிடுவார்கள்.

X X X

மழையில்லாவிட்டால், மகேசன் வந்து காப்பாற்றுவதில்லை. பஞ்சம் வந்து நம்மைவாட்டுகிறது! ரிஸ்ய சருங்கர் இப்பொழுதில்லை. 'சக்கரக்காலர்கள்' சகாப்தம் முடிந்துவிட்டது. வருணஜபம் செய்யும் 'வக்கிர' புத்திக்காரர்கள்! வாய் ஜம்பம் பலிக்கவில்லை!

உலர்ந்தகாவுக்குக்கூட உபயோகப்படாத ஊராள்வோர் என்று தூற்றமே, கேலி பேசுமே, தாகம்! பசிக்குப் புசி என்று கொடுக்கும் அரிசிக்கும் அளவு, அட்டைமுறை, கட்டுப்பாடு, கண்டிப்பு.........இருப்பதை எண்ணினால், கிண்டல் புரியுமே, ஒட்டியவயிறு!

குடிக்கும் தண்ணீருக்கும், கதி இல்லை என்றால், என்செய்வது? பாதி சோப் நுரையுடன் பைப்படியில், நிற்கும் பட்டினத்து பாலனும், குடிக்க நீரில்லை என்று கூவிடும் குமரனும் வயலுக்குப் பாய்ச்ச வாய்க்காலில், விழி வைத்து ஏங்கும் வரதனும், கேலிச் சித்திரங்களல்ல, வேதனை வடிவங்கள்! கம் கையாலாகாத தனத்தின் குழந்தைகள்! ஆளத் தெரியாதவர்கள் கையில் அகப்பட்டுத் தவிக்கிறது நாடு என்பதை எடுத்துச் செல்லும் சாட்சியங்கள்!

நீர்த்திட்டங்களைக் கவனிக்க ஒரு மதிமந்திரியார் இருக்கிறார். அவருக்குக்கீழ் அநேகர் வேலை செய்கின்றனர். இருந்தும் குடிக்கத் தண்ணீருக்குத் தவிக்கிறோம்! 'உடுமலைப் பேட்டை' உண்டாகிவிட்டது!

நாட்டாண்மைக் கழகமும், நகராண்மைக் கழகமும் செய்யக்கூடியவை இந்த குடிநீர் வசதிகள் என்று விட்டு விடுவதற்கில்லை. ஆளும் மந்திரிசபை அக்கறை காட்டிட வேண்டிய அவசியமான, உடனடி வேலை. நீருக்குத் தவிக்கும் நிலை நீடிக்கக் கூடாது—அது நம் நாட்டிற்கே அவமானம்!

பருவமழை யின்மையால் இந்தப் பாழ் நிலை என்று கூறிப்பதுங்கிவிட்டாலமட்டும் குடிநீர் கிடைத்து விடுமா?

வற்றாத ஜீவநதிகள் இங்குண்டு. வகைவகையான காட்டாறுகள் பலவற்றைக் காட்டமுடியும். அவைகளில் நீரோடும் நேரங்களும் உண்டு. வரண்டிருக்கும் நிலைமையும் இருக்கிறது. நாம் நிரந்தர நீர்வசதிக்கு என்ன செய்யவேண்டும்? தேக்கி வைத்து, தேவைப்படுகிற பொழுது, வேண்டிய அளவு வெளியில்விட்டுத் தவிப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மழையை மட்டும் நம்பியே வாழ்ந்துவிட முடியாது. 'பெய்யென்றால் பெய்யும்' என்று வள்ளுவர் வாக்குக்குப் பொய்யுரை வழங்கி, 'மேக ராணிகள்' பலரை நினைவுப்படுத்திச் சிரிக்கச் செய்யும் நிலைமை கூடாது. மழை பெய்விக்கும் மந்திரம் தெரிந்த மங்கைமார்கள் இல்லை. மழைக் காலந் தவறிப் பெய்துவிட்டாலும், அளவில் கூட்டியோ குறைத்தோ பொழிந்தாலும் ஆபத்து! ஆகவேதான் அணைக்கட்டுகள், நீர்த் தேக்கங்கள் தேவை யென்று கூறுகிறோம்.

புது நிலங்களைப் பயிரிடவும், பழைய நிலங்களில வளத்தை கூட்டவும் வசதி அதிகம் வேண்டும்.

அணைக்கட்டுகள், கால்வாய்கள், ஏரிகள், குளங்கள், செய்கிணறுகள் ......என்று பல முறைகளில் ஆட்சியாளர் முன் வரவேண்டும்.

நமது தாயகத்தில் காவேரி டெல்டா பாசனம், குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணராஜ் சாகர் அணைக்கட்டு, மேட்டூர் அணைக்கட்டு, மேலணை, கல்லணை, என்று நீர்த் தேக்கங்களை ஏற்படுத்தி வளத்தைப் பெருக்கியிருக்கிறோம்.

கோளளிடத்திற்குக் கீழ் அணைக்கட்டிலிருந்து பிரியும் வடவாறு, வடராஜா வாய்க்கால் தென்னாற்காட்டில் 93,000 ஏகரும், தென்ராஜா வாய்க்கால் தஞ்சையில் 28000 ஏகரும் பாய்கிறது என்பதைப் புள்ளி விவரத்துடன் கண்கூடாகப் பார்க்கிறோம்.

பேரியாறு திட்டம் நமக்குப் புரியாத புதிர் இல்லை. 180 இலட்சம் செலவு செய்ததால் இன்று இத்திட்டத்தின் மூலம் 192000 ஏகராவுக்கு பாசன வசதி தரமுடிகிறது, மதுரையில்!

கிருஷ்ணா, கோதாவரியில் நீர்த் தேக்கத் திட்டம வெற்றிமேல் வெற்றியைக் காட்டுகிறது

மழையில்லை, ஆகவே வழியில்லை என்று அழுதிடும் துரைத்தனத்தார் காவேரி — மேட்டூர் திட்டத்தைக் கொஞ்சம் கண்காணிக்க வேண்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)

சி. என். அண்ணாத்துரை

எழுதிய

புதிய புத்தகங்கள்.

ரங்கோன் ராதா	2	8	0
செல்லப் பிள்ளை	1	0	0
ஜெபமாலை	0	8	0
மாடிவீடு	0	8	0
செவ்வாழை	0	8	0
சாது	0	8	0
வாழ்க்கைப் புயல்	0	10	0
சிந்தனை விருந்து	0	6	0

இவைகளின் முழு விற்பனை உரிமையும் பரிமளம் பதிப்பகத்தாரிடமிருந்து சென்னை பகுத்தறிவுப் பாசறை பெற்றிருப்பதால், இனி, இப்புத்தகங்கள் தேவையுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கே எழுதவும்.

பகுத்தறிவுப் பாசறை,
147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

எச்சரிக்கை

“பலே! வெகு சாமர்த்தியமாக வேலை செய்திருக்கிறீர்கள். நன்று, நன்று உங்கள் சேவை. மெச்சுகிறேன், பாராட்டுகிறேன், உங்களது பணி: கண்டு. விடாதீர்கள், தொடர்ந்து இதைப்போலவே வேலை செய்யுங்கள்!” என்று பாராட்டுக் கடிதம் அனுப்பியிருக்கிறாராம், நமது மதிமுக நிதியமைச்சர்—தனது விற்பனைவரி வசூல் இலாகாவின் தலைவருக்கு.

“இந்தியாவிலுள்ள எந்த மாகாணமும் இவ்வளவு தூரம் வசூல் செய்ததில்லை—நாம்தான் அத்தகைய பெருமைக்குரியவர்கள். அடடா! யாரே, நம்மை வெல்லவல்லார்” என்று விருது பாடியிருக்கிறாராம் அக்கடிதத்தில்.

“18-கோடி!—1949—50 ஆண்டுக்கான விற்பனைவரித் தொகையாக வசூலாகியிருக்கிறது. இந்த வசூல் கண்டதும், வரி போடலாமா வகை எங்கேயிருக்கிறது, என்ற யோசனையிலேயிருக்கும் நிதி மந்திரியாருக்கு அகமும் முகமும் மலர்ந்திருக்கிறது. திருப்புகழ்பாடியிருக்கிறார் — விற்பனைவரி வசூலின் விபரத்தைக் கண்டதும்.

கற்பகவிருட்சம் காமதேனு, அமுத சஞ்சீவி என்று புராணப் பெருமைகளைப் போர்த்தி, புளகாங்கிதமடைந்து வருபவர்—போகுமிடங்களிலெல்லாம், நிதிமந்திரியார்.

விற்பனைவரி, உண்மையில் சென்னை மாகாண வருமான இனங்களிலே முதன்மை வகிக்கிறது. கோபாலர் கூறுவது போல, மாகாண சர்க்காரின் கவலைபோக்கும் காரிகையாகவேயிருந்துவருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் விற்பனைவரி, எவ்வளவு வேகத்தில் உயர்ந்திருக்கிறது என்பதைக் கணக்கெடுத்தால், வரி வளர்ப்பதில் காங்கிரசாரின் திறமை எவ்வளவு சக்தியும் பெருமையும் வாய்ந்தது என்று விளங்கும்.

இந்த விற்பனை வரியே—கருணை மிக்க காங்கிரஸ் கட்சி சிருஷ்டித்ததுதான்! ஆச்சாரியார், முதலமைச்சராக இருந்த காலத்தில், விற்பனை வரிவசூலிக்கத் திட்டமிட்டுச் சட்டம் செய்தார். 1939—40 முதல், வியாபார வரி, சர்க்கார் பொக்கிஷத்துக்குப் பணம் தேடித்தரும், ஒரு வழியாக ஆயிற்று.

அப்போது வசூலானது ஒரு மடங்கு என்றால், இப்போது, இந்தப் பத்து ஆண்டுகளில் முன்பைவிட 23 மடங்கு அதிகமாக வசூலாகிறது!

முன்பு ஒருமடங்கு!

இப்போது 23-மடங்கு!!

மக்கள் தலையிலிருக்கும் வரிச் சுமையைக் கீழே இறக்கிவிடப் போவதாகக் கர்ச்சித்து, சுயராஜ்யப் போர் நடத்திய இச் சூராதி சூரர்கள் ஆட்சியில் புதுவரி ஒன்று, பூத்தது! அது, பத்து ஆண்டுகளில் முன்பைவிட 23-மடங்கு அதிகமாகியிருக்கிறது!

உணவுப் பொருளுள் பட மக்களுக்கு அத்தியாவசியமான எல்லாப் பொருள்களுக்கும் விற்பனை வரி வாங்கப்படுகிறது. இந்தக் கெடுபிடி கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளில் வெகு வேகமாக வளர்ந்து இப்போது உச்சநிலைக்கு வந்திருக்கிறது, என்பதை இக்கணக்கு விளக்கும்.

	1946-47	47-48	48-49	49-50
விற்பனை வரி	695	831	1303	1523
தமாஷா வரி	54	75	103	113
மோட்டார் ஸ்பிரிட்வரி	34	52	60	70

(கணக்கு இலட்ச ரூபாயில்)

இவ்வளவு வேகமாக, வரி வளர்ந்திருக்கிறது இந்த ஏழை பங்காளரின் ஆட்சியில். இந்த வளர்ச்சியைக் கண்டுதான், மனம் பூரித்துப்போய், திருப்புகழ் பாடி திருவோலையனுப்பியிருக்கிறார் “திரு” வைப்பாதுகாத்துப் பராமரிக்கும் நிலையிலிருக்கும், நிதியமைச்சர்.

விற்பனைவரி — வளர்கிறது என்றால் மக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்று பொருள். கடைக்குப் போகும் கந்தன் கால் கஜம் துணி எடுத்தாலும் செலுத்த வேண்டியவனாயிருக்கிறான் விற்பனைவரி. துணியென்று மட்டுமல்ல, மக்கள், தாங்கள் வாங்கும் உணவுப்பொருள்களுக்குக் கூட வரி செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். விற்பனைவரியை, மக்களிடமிருந்து வியாபாரிகள் மூலம் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள் சர்க்கார். எனவே நேரடியாக மக்களைப் பாதிக்கச் செய்வதுதான் இந்த விற்பனைவரி. விற்பனைவரிமூலம் சர்க்காருக்குக்கிடைத்திருக்கும் 15-கோடி ரூபாய்களும் ஏழைகளின் காசுகளால நிரப்பியதுதான்! தமாஷா வரியும், மோட்டார் ஸ்பிரிட்மூலம் வசூலான வரியும் மக்களின் பணத்தால் நிரம்பியதுதான்! எனினும், இக் ‘கண்ணீர்க் கோட்டை’யைக் காணும் போது களிப்பும் குதூகலமும் மலர்கிறது — மக்கள் வாழ்வை வேதனையிலிருந்து மீட்கப்போவதாக, விருது பாடி, பீடமேறிய காங்கிரஸ் அமைச்சருக்கு.

அகமும் முகமும் மலர, இது பற்றிக் கோவையில் மே 6-ந்தேதி நடைபெற்ற வர்த்தக சபையின் வரவேற்புக்குப் பதிலளிக்கையில் வெளியிட்டிருக்கிறார். அங்கு மட்டும் என்றல்ல, எங்கெங்கு 'விஜயம்' செய்கிறாரோ அங்கெல்லாம், விற்பனை வரியின் பெருமை குறித்து 'திருப்புகழ்' பாடியவண்ணமேயுள்ளார்.

கோவையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் 'பாலுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை நீக்கிவிடுமாறு' கோரியிருக்கின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனையாகும் பாலுக்கு — விற்பனைவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது, ஆட்சியாளரால். இதை நீக்கிவிட வேண்டுமென்பதுதான், நிதியமைச்சரிடம் தெரிவிக்கப்பட்ட கோரிக்கை.

கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் நோக்கம் மக்களின் குறை தீர்க்கப்படவேண்டுமென்பது—ஆனால் நிதியமைச்சரோ அதற்கான வழி வகைகளைக் காண்கிறேன், யோசிக்கிறேன் என்று கூறாமல், வழக்கம்போல 'தெந்தின' பாடியிருக்கிறார்.

"வியாபார வரிகள் மூலம் சர்க்காருக்கு நிறையவருமானம் வருகிறது. எனினும், அதை விடப் பன்மடங்கு செலவுகள் மலைபோல, இருக்கின்றன, இந்நிலையில் அரிசி நவதானியங்கள் போன்ற உணவுப் பொருள்களுக்குக்கூட விற்பனை வரி வசூலிக்கும்போது பாலுக்கு மட்டும் எப்படி நான் விதிவிலக்கு அளிக்க முடியும்?" என்று, வேகங்கலந்த குரலில கேட்டிருக்கிறார். அதோடு நின்றுவிடவில்லை, அதற்கு மேலும் சென்றிருக்கிறார் தனது எக்கச்சக்கமான சூழ்நிலையை விளக்க.

"எனவே, விஷயத்தை விளக்கி உதவி கோடுங்கள் என்று மத்திய சர்க்காரைக் கோரும்படி ஏற்பட்டு விடுமோ வென நான் அஞ்சுகிறேன்"

அஞ்சுகிறாராம், அவர்! கூறியிருக்கிறார், கோவைமாநகரில், வியாபார வித்தகர்களிடம்!

ஆச்சாரியார் காலத்தில்—1939—ல் —வியாபார வரிகள் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை 79-லட்ச ரூபாய்கள்தான்.

ஆனால், இப்போதோ 1,807-லட்சம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. 23-மடங்கு அதிகமாக, மக்கள், சர்க்காருக்கு வரி தந்திருக்கின்றனர்! எனினும் மந்திரியார், மக்களைப் பாதிக்கும் இந்த வரிச்சுமையைக் குறைக்கமுடியாது — செலவுக்கோ பணம் போதவில்லை!—மத்திய சர்க்காரிடம் இதைத் தெரிவித்து உதவிகேட்கும்படி நேரிட்டுவிடுமோவென அஞ்சுகிறேன் என்று வெளியிட்டிருக்கிறார்.

X X X

வரும் ஆண்டுகளில் செலவுக்குப் பணம் போதாமல் மாகாணங்கள் திண்டாடும்படி நேரலாம்.

இரண்டு மூன்று வருடங்களில் விலைவாசிகள் குறையும்படி நேரலாம் குறைந்தால், விற்பனை வரியும், வருமான வரியும், அரசாங்கத்துக்கு குறையக்கூடும்.

புது அரசியலமைப்பில் விற்பனை வரி குறித்து இயற்றப்பட்டிருக்கும் சட்டம் அடுத்த ஆண்டுமுதல் அமுலுக்கு வரப்போகிறது.

ஆகவே, மேலும் விற்பனைவரியை அதிகரிக்கவோ, இப்போது போலவருமானம் பெறவோ இயலாது.

என்று, எச்சரிக்கை விடுத்திருக்கிறது, இந்திய ரிசர்வ் பாங்கி, சின்னாட்களுக்குமுன் இந்திய சர்க்காரின் நிதிநிலை குறித்தும், மாகாணச் சர்க்கார்களின் நிலையைக்குறித்தும், விளக்கி.

மாகாணங்களின் பொக்கிஷம் போதிய அளவு நிரம்பியிருக்கவேண்டும்; இல்லையென்றால் எதிர்காலம் இருட்டாகிவிடும் என்று எச்சரிக்கை விடுப்பதுபோல இருக்கிறது, ரிசர்வ் பாங்கி விடுத்திருக்கும் அறிக்கை.

1. மாகாண சர்க்காருக்கு, எதிர்காலத்தில் இப்போதுள்ளது போல வருமானம் கிடைக்க வழியில்லை.

2. நாட்டின் நன்மைக்கான பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டியிருப்பதால், அதற்கான பணம் தேவை.

இதுதான், ரிசர்வ்பாங்கி விடுத்திருக்கும் எச்சரிக்கையின் இரத்தினச் சுருக்கம்.

இப்போதே, ஒவ்வொரு மாகாணங்களின் நிதி நிலைமையும் சரியாகயில்லை — சாய்ந்து கொண்டிருக்கிறது, சரிந்துவிடுமோ எந்த நேரத்திலாவது என்ற சஞ்சலத்தை வீசிக்கொண்டேயிருக்கிறது.

தனது வரவுசெலவுத் திட்டத்தில் துண்டு விழுகிறதென்றால், அதை ஈடுகட்ட மாகாண சர்க்கார்கள் மத்திய சர்க்காரைத்தான் நோக்குவர். மாகாணங்களின் தேவைகளைக் கண்டறிந்து, அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்துடையது.

ஆனால் மத்திய சர்க்காரோ மாகாணங்களின் உதவிக்கென ஒதுக்கியிருக்கும் தொகை, குறைவானதாகும்.

1950-51-க்கு, எல்லா மாகாணங்களும் தங்களுக்குக் கடனாக உதவ வேண்டும் என்று மத்தியசர்க்காரிடமிருந்து எதிர் பார்க்கும் தொகை 60-கோடி ரூபாய்களாகும். ஆனால், மத்திய சர்க்காரோ 35-கோடி ரூபாய்தான் உதவமுடியும் என்று தனது வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கிவைத்திருக்கிறது.

எனவே, மாகாண சர்க்கார்கள் இந்திய சர்க்காரிடம் வேண்டிய அளவு பணத்தைக் கடனாகவோ அல்லது உதவியாகவோ பெறமுடியுமென்பது சாத்தியமல்ல.

இது, இப்போதுள்ள நிலை. இந்தச் சங்கடம் 'சமுத்திரம்' ஆகுமேயொழிய அஸ்தமித்து விடமுடியாது. ஏனெனில்,

1. ஒவ்வொரு மாகாணங்களும், ஏராளமான திட்டங்களைத் தீட்டி வைத்துக்கொண்டு அவைகளை நிறைவேற்ற, பணத்துக்கு எதிர் பார்த்திருக்கின்றனர்.

2. சமுதாய நன்மைகளுக்கான புதுக் காரியங்களைச் செய்யவேண்டிய பொறுப்பும் மாகாண சர்க்கார்களுக்கு அதிகரித்து வருகிறது.

3. இந்தியா குடியரசு ஆகிவிட்ட காரணத்தால், ஒவ்வொரு மாகாணங்களிலுமுள்ள சட்ட சபைகளும் ஓரளவு அதிகப்பொறுப்பையடைந்திருக்கின்றன. எனவே கல்வி, வைத்திய வசதி, வீட்டு வசதி போன்ற வாழ்க்கை வசதிகளைச் செய்துதர, சட்டசபையில் திட்டம் தீட்டப்பட்டால் அவைகளை அவசியம் நிறைவேற்றவேண்டிய பொறுப்பும் அரசாங்கத்துக்கு அதிகரித்திருக்கிறது.

எனவே, எதிர்காலத்தில் மாகாண

அரசாங்கங்கள் இன்றைய நிலையை விட அதிக செலவைச் சமாளிக்க வேண்டியவைகளாக யிருக்கின்றன. செலவு உயர்கிறது என்றால் அதைச் சமாளிக்க வரவும் அதிகரிக்கவேண்டும். வரவு இன்றிச் செலவுசெய்ய முடியாது!

X X X

1939-ல் காங்கிரஸ் மந்திரி சபை முதல் முதல் ஆட்சி நடத்தியபோது செய்த சீர்திருத்தங்களின் விளைவாக வரிவசூலில ஒரு புது மாற்றம் ஏற்பட்டது.

அதற்கு முன் சர்க்காரின் வருமானத்துக்குரிய முக்கியவழிகளாகக் கருதப்பட்டவை, நிலவரியும், கலால் வரியும்தான். ஆனால், புதுச் சீர்திருத்தத்தின் விளைவாக ஆட்சியாளரின் முக்கிய வருமான வாய்க்கால்களாக விற்பனை வரியும், வருமான வரியும் ஆயின.

இப்போது, அரசாங்கத்தின் முக்கிய வருமான வழிகளாகயிருப்பவை விற்பனை வரி, வருமான வரி ஆகிய இரண்டுந்தான். இந்த இரண்டும், எதிர்காலத்தில் அதிகரிக்குமாஎன்று யோசித்தால் சஞ்சலமே உருவாகும்.

பொருள்களின் விலைவாசிகள் குறைந்தால் விற்பனைவரி குறையும்.

விற்பனை மூலம் வரும் தொகை குறைந்தால் வருமான வரியும் குறையவே செய்யும்.

வருமான வரியைவிட, விற்பனை வரியின் நிலைமைதான் எதிர்காலத்தில் மிகவும் இடர் மிகுந்ததாகயிருக்கும்.

கற்பகவிருட்சம், காமதேனு என்றெல்லாம் இன்று கூறித் திரிகிறாரே கோபாலர், அந்த விற்பனை வரி குறித்துப் புது இந்திய அரசியலமைப்பில ஒரு ஷரத்து இருக்கிறது.

இந்த ஷரத்து அடுத்த ஏப்ரல் முதல் அமுலுக்கு வரப்போகிறது. அது அமுலுக்கு வந்துவிட்டால் கோபாலரின் குதூகலம் நீடிக்க முடியாது! விற்பனைவரி குறையவே செய்யும்—ஏனெனில் விற்பனை வரி வசூலிப்பதில் மாகாணங்களுக்கு சிற்சில கட்டுப்பாடுகள் இந்த ஷரத்தால் உருவாகி யிருக்கின்றன.

என்வே விற்பனை வரி, நிதியமைச்சரின் 'கதி நீயல்லால்' என்ற கானத்துக்கு ஒத்தூதும் கருவியாகயிருக்க முடியாது எதிர்காலத்தில்.

விற்பனை வரிக்கு அடுத்தபடியாக மாகாண சர்க்காரின் வருமான இனமாக இருப்பதுவோ நிலவரிதான். இது குறித்து, ஒரு நிரந்தரமான ஏற்பாடு இன்றுவரை ஏற்படவில்லை. அதோடு, நிலவரி மூலம் அதிக தொகை வசூலிப்பதென்பதும் எதிர்காலத்தில் சாத்தியமில்லை. நிலவரி—வளர்பிறைச் சந்திரனல்ல, தேய்பிறைச் சந்திரன்தான்!

ஆகவே, மாகாண சர்க்கார்களின் எதிர்காலம் இருண்டதாகவே காட்சியளிக்கிறது. இந்த இக்கட்டான நிலையைத்தான், இந்திய ரிசர்வ் பாங்கி, எடுத்துக்காட்டி யிருக்கிறது.

நாட்டின் நன்மைக்கான பல வேலைகள் செய்யப்பட வேண்டும்.

ஆனல் வருமானம் அதிகரிக்கும் வகைகளோ தென்படவில்லை.

எனவே, எதிர்காலத்தில் மாகாணங்களின் நிலை தீயில அகப்பட்ட புழுபோல திண்டாடும்படிதான் நேரும்.

* • *

நிதியமைச்சர் கோபாலர், விற்பனை வரி வசூலைக் கண்டு பெருமிதப்படுகிறார்—பெருமையடித்துக் கொள்கிறார். ஆனல், பெருந்தொல்லை மாகாணத்துக்கு விரைந்துகொண்டிருக்கிறது.

மத்திய சர்க்கார், புது அரசியலமைப்புப்படி மிகப் பலம் வாய்ந்ததாகி யிருக்கிறது. மாகணங்கள், சாதாரண ஜில்லாக்களைப்போல ஆகி யிருக்கின்றன. எதற்கும், தன்னை எதிர்நோக்க வேண்டியதாக, இந்திய சர்க்கார், மாகாணங்களை ஆட்டுவிப்போராக ஆக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வளவு அதிகாரம், பெற்றதாக யிருக்கும் மத்திய சர்க்கார், மாகாணங்களின் நல்லது கெட்டதுகளைக் கவனிக்கும் பொறுப்பேற்றிருக்கும் இந்திய அரசாங்கம், வேண்டிய அளவில் மாகாணங்களுக்கு உதவி செய்யும் நிலையில இல்லை. மாகாணங்கள் உதவி கோரினால அதை நிவர்த்திக்கக்கூடிய நிலையில் இல்லை.

சென்னை வளமில்லாத மாகாணமல்ல! தனது செலவைக் கவனிக்குமளவு வரிவசூல் செய்ய முடியாத பிரதேசமுமல்ல. திராவிடத்தின் செல்வம், தனது நாட்டை நன்மைப் பாதையில் நடத்திச் செல்லுமளவு குவிந்திருக்கிறது — இயற்கையின் உருவில். எனினும், திண்டாட வேண்டிய நிலையிலிருக்கிறது திராவிடம், தேம்பித் தவிக்கவேண்டிய நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்திய சர்க்காரின் பொக்கிஷத்துக்கு நிறைய வருமானம் தரும் வரிகளாக யிருப்பவை வருமான வரியும், கலால் சுங்க வரியும்தான். இந்த வரிகள் அந்தந்தமாகாணங்களிலிருந்தும் மத்திய சர்க்காருக்குப் போகின்றன. சர்க்காருக்கு, இன்று முக்கிய வருமான இனங்களில் ஒன்றாக யிருப்பது வருமான வரி எனக்கண்டோம். இந்த வருமான வரி, மத்திய சர்க்காரால் வசூலிக்கப்பட்டு தங்கள் பொக்கிஷத்துக்கு கொண்டுபோகப்படுகிறது.

ஆனல், மாகாணத்துக்கு மிஞ்சி யிருக்கும் முக்கிய வரி விற்பனைவரி ஒன்றுதான். இது, எதிர்காலத்தில குறையக்கூடியது என ரிசர்வ் பாங்கி எச்சரிக்கிறது.

அது மட்டுமின்றி விற்பனை வரி மறைமுகமாக மக்கள் தலையில், பாமர ஜனங்களின்மீது, சுமத்தப்படுவதாகும். வருமான வரி அப்படிப்பட்டதல்ல, வாழ்க்கைக்குத் தேவையான பணத்தைவிட அபரிமிதமாகச் சேரும் பணத்தின்மீது சுமத்தப்படும் வரியாகும்.

பணம் பெருத்தான்களிடமிருந்து வசூலிக்கப்படும் இந்த வருமான வரி மத்திய சர்க்காருக்குப் போய் விடுகிறது. மக்களைப் பாதிக்கும் விற்பனை வரி இனங்களோ மாகாண சர்க்கார் வசமிருக்கிறது. மக்கள் வேதனையைப் பன்மடங் காக்கும் இந்த விற்பனையைத்தான் போற்றுகிறார், புகழ்கிறார் நம் கோபாலர்.

> இந்தியாவிலேயே அதிக விற்பனை வரி வசூலிப்பது சென்னை தான்

என்று வெட்கமில்லாமல் கூறிக்கொண்டு!

மாகாணங்களுக்கு வருமானம் தரக்கூடிய வருமானவரியைத் தன் பொறுப்பில் வைத்துக்கொண்டிருக்கும் மத்திய சர்க்கார், மாகாணங்களுக்கு ஏற்படும் இக்கட்டான சம

யங்களில் உதவும் நிலையில் இல்லை. அங்கும் பஞ்சநாதம்தான் எதிரொலிக்கிறது.

காரணம் தெரியவேண்டுமா? இராணுவத்துக்கென ஆகும் செலவைக் கவனியுங்கள். பாதிக்குமேல் செலவாகிறது, இராணுவத்துக்கென.

வரவில் கிட்டத்தட்ட பாதியளவு ராணுவத்துக்கென விரயமாகிறது. ஆகவே, ஜீவாதாரமான வேலைகளைச் செய்ய முடிவதில்லை — மாகாணங்களுக்கும் உதவ முடிவதில்லை, மத்திய சர்க்காரால்.

மாகாணங்கள் தரும் வருமான வரிப்பணம் வீண், விரயமாகிறது, இராணுவத்தின் பெயரால்.

இராணுவம் ஒரு நாட்டுக்குத் தேவையில்லாத ஒன்று ஹிம்சையால் ஆட்சிநடத்துவது கூடாது 'அசோகர்' ஆளவில்லையா போரிடாமல், — எனவே, அஹிம்சா வீரர்களாகிய இவர்கள் ஆயுதபடைகளே இல்லாமல் ஆட்சி நடத்துவதுதான் முறை—என்று, நாம் கூறவில்லை.

வளரும் உலகில் நிமிடத்துக்கு நிமிடம் புதுப்புது ஆயுதங்கள் கிளம்பிக்கொண்டிருக்கின்றன. அணுகுண்டு, அதற்குப்பின் ஐட்ரஜன் குண்டு என்று நிமிட நேரத்தில் ஒரு நாட்டைச் சாம்பலாக்கிவிடும் கொடூர ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் புதுநிலையை எட்டிப் பிடிக்க இந்தியாவுக்கு இன்னும் பலவாண்டுகள் பிடிக்கும். அதற்குள் இன்னும் எத்தனையோ வகையான நாசமுறைகளை, விஞ்ஞானம் கண்டுபிடித்துவிடும்.

அப்போது, இவர்களின் இந்த 'இரதகஜ துரகபதாதி'களால் எதையும் எதிர்த்து நின்று சாதித்துவிட முடியாது.

இதை மனதில் கொண்டதாகத் தெரியவில்லை இந்திய சர்க்கார். நாட்டின் நன்மைக்குப பிரயோஜனப்படக் கூடிய பணத்தை, ராணுவத்தின் பெயரால் விரயமாக்குகின்கினர். போலிப் பெருமைக்கு பெட்டிப் பணம் கரியாகிறது—இந்த ஏழை பங்காளர் ஆட்சியில்!

இப்படி வீணாக பணத்தைச் செலவழிக்கிறது, இந்திய சர்க்கார் பல வகைகளிலும்.

அப்படிச் செலவழிக்கும் பணம், மாகாணங்களின் மூலம் வசூலாகிச் செல்கிறது.

வருமான வழிகளில் முக்கியமான ஒன்றைஇழந்துவிட்டு, மாகாணமோ திண்டாடுகிறது இத்திண்டாட்டம், எதிர்காலத்தில் அதிகரிக்குமென எச்சரிக்கை செய்கிறது, ரிசர்வ் பாங்கி.

கோபாலரோ, மக்களைப் பாதிக்கும் விற்பனை வரியைக் குறைக்க முடியாது. இப்போதே பணமில்லாது திண்டாடுகிறேன், செலவுக்கு—திண்டாட்டம் அதிகமாகி மத்திய சர்க்காரிடம் பணம் கேட்கும்படி நேரிடுமோவென அஞ்சுகிறேன் என்று கூறுகிறார்—வேகமும் சோகமும் கலந்த குரலில்.

“அஞ்சுகிறேன்” என்ற சொல்லில் அர்த்தமில்லாமலில்லை. ஒரு முறை இருமுறையல்லஎத்தனையோ தடவைகள் மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரை நோக்கி மண்டியிட்டதும், 'திரும்பாதே இங்கே' என்று இந்திய அரசாங்கம் மண்டையிலடித்தது மான நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக்கொண்டுதான் வேதனையும்வெட்கமும் கலக்க வெளியிட்டிருக்கிறார் இத்தகவலை.

* * *

'எனக்கு நன்றாக சமைக்கத் தெரியும். என்னை அரண்மனையில சேர்த்துவிடுவாயா?' என்று வேண்டுகிறான். 'என்னைச் சேர்த்துவிட்டால் முதலில் சமயற்காரனாயிருப்பேன். பின்னர் மெள்ள, மெள்ளமுன்னுக்கு வந்து மந்திரியாகிவிடுவேன. மந்திரியாகிவிட்டால் நான் மனிதனாகவா இருப்பேன்!” என்று கூறிக்கொண்டே அடுப்பிலிருக்கும் சோற்றுப் பானையை உதைக்கிறான். இப்படி, ஒரு கட்டம் “மருதநாட்டு இளவரசி” என்ற படத்தில் வருகிறது. மந்திரியானதும் என்னென்ன செய்வேன் தெரியுமா என்று அடுப்பிலிருந்த சோற்றுப் பானையை உடைத்துத் தள்ளுகிறான்; அக்கதையில். அதைப் போலவே, இன்று ஆட்சியாளர்களின் போக்கும் இருக்கிறது. படத்திலாவது தான் கனவு கண்டு கொண்டே, கஞ்சிக் கலயத்தைப் போட்டுடைத்தான்.

ஆனால் இவர்களோ, கனவு கண்டதுபோய் கண்கண்ட மந்திரிகளானார்கள். மந்திரிகளானதும், மனிதர்கள் என்பதை மறந்து வருகிறார்கள் — சமுதாயத்தையும் மக்களையுமே மறந்து வருகிறார்கள். எப்படியாவது காரியம் நிறைவேறினால் போதும் என்ற நினைவோடு சென்றுகொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாகவே, மக்களைப் பாதிக்கும் வரி வகைகளைப் போடவும் அஞ்சுவதில்லை.

மத்திய சர்க்காருக்கு கட்டுப்பட்டிருக்கும் காரணத்தால், தனக்குரிய தான வருமான இனத்தையும் இழந்துவிட்டு வக்கில்லை, வழியில்லையென்று முகாரி பாடுகிறார்கள்.

ரிசர்வ் பாங்கியின் எச்சரிக்கையைக் காணும்போது, இந்த முகாரி வளருமென்று தோன்றுகிறதேயொழிய முடியும் என்பதற்கான அறிகுறி தென்படவில்லை.

இந்தியா ஒரே நாடு என்று எண்ணிக் கிடக்கும்வரை இந்த முகாரி—முடியாது. நமது பணத்தைக் கொடுத்துவிட்டு கையேந்தி நிற்கும் நிலைதான் ஏற்படும். கையேந்தும் போது பணமில்லையென்று விட்டினால், மக்கள் மீது வரிச்சுமையை போட்டு கஷ்டப்படுத்தத்தான் நேரும்.

எதிர்காலத்தில் வரி போடும் வழி கூட இல்லை, விற்பனை வரியை உயர்த்தவும் இயலாது.

இந்நிலையில், மாகாண சர்க்காரின் கதி—கனியைக் கொடுத்துவிட்டு காஞ்சிரங்காய்க்கு ஏங்கி அதுவும் கிடைக்காது! 'ஐயோ!' என்று அலறி வேதனைப்படுவது போலத்தான் ஆகும்!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.